Project Madurai
மதுரை தமிழ் இலக்கிய
மின்தொகுப்புத் திட்டம்

---

# kalingkattup paraNi of CeyangkoNTAr (in Tamil Script, unicode format)

## சயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணி

---

Etext preparation : Mr. P.R.Sivakumar, Toronto, ON, Canada

Proof-reading: Mr. P.K.Ilango, Erode, Tamilnadu, India
PDF and Web version: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland
Source acknowledgement: Suvadugal Pathippagam, Herslebs GT-43, 0578 Oslo 5, Norway)

This webpage presents the Etext in Tamil script but in Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:
i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha, Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your

computer
and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages (Netscape 6, Internet Explorer 5) with the Unicode Tamil fontchosen as the default font for the UTF-8 char-set/encoding view.
. In case of difficulties send an email request to
kalyan@geocities.com or
kumar@vt.edu

© Project Madurai 1999 - 2003
Project Madurai is an open,

voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website

[http://www.projectmadurai.org/](http://www.projectmadurai.org/)
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

சயங்கொண்டார் இயற்றிய
கலிங்கத்துப் பரணி

**kalingkattup paraNi of CeyangkoNTAr**

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து | 20 ( 1 - 20) |
| 2. | கடை திறப்பு | 54 ( 21 - 74) |
| 3. | காடு பாடியது | 22 ( 75 - 96) |
| 4. | கோயில் பாடியது | 24 ( 97 - 120) |
| 5. | தேவியைப் பாடியது | 13 (121 - 133) |
| 6. | பேய்களைப் பாடியது | 19 (134 - 152) |
| 7 | இந்திர சாலம் | 25 (153 - 177) |
| 8. | இராச பாரம்பரியம் | 34 (178 - 211) |
| | | 20 (212 - |

| | | |
|---|---|---|
| 9. | பேய் முறைப்பாடு | 231) |
| 10. | அவதாரம் | 80 (232 - 311) |
| 11. | காளிக்குக் கூளி கூறியது | 92 (312 - 403) |
| 12. | போர் பாடியது | 68 (404 - 471) |
| 13. | களம் பாடியது | 125 (472 - 596) |


---

## சயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணி

### 1. கடவுள் வாழ்த்து

உமாபதி துதி

1.

புயல்வண்ணன் புனல்வார்க்கப்
பூமிசையோன்
தொழில்காட்டப் புவன வாழ்க்கைச்
செயல்வண்ண நிலைநிறுத்த
மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தை செய்வாம். 1

2.

அருமறையி னெறிகாட்ட
வயன்பயந்த
நிலமகளை யண்டங் காக்கும்
உரிமையினிற் கைப்பிடித்த
வுபயகுலோத்
தமனபயன் வாழ்க வென்றே. 2

திருமால் துதி

3.

ஒருவயிற்றிற் பிறவாது பிறந்தருளி
யுலகொடுக்குந்
திருவயிற்றிற் றொருகுழவி
திருநாமம் பரவுதுமே. 3

4.

அந்நெடுமா லுதரம்போ லருளபயன்
றனிக்கவிகை
இந்நெடுமா நிலமனைத்தும்
பொதிந்தினிது வாழ்கவென்றே. 4

நான்முகன் துதி

5.

உகநான்கும் பொருணான்கு
முபநிடத மொருநான்கு
முகநான்கும் படைத்துடைய

முதல்வனையாம் பரவுதுமே. 5

6.
நிலநான்குந் திசைநான்கு
நெடுங்கடல்க ளொருநான்குங்
குலநான்குங் காத்தளிக்குங் குலதீபன்
வாழ்கவென்றே. 6

சூரியன் துதி

7.
பேராழி யுலகனைத்தும் பிறங்கவள
ரிருணீங்க
ஓராழி தனைநடத்து மொண்சுடரைப்
பரவுதுமே. 7

8.

பனியாழி யுலகனைத்தும் பரந்தகலி
யிருணீங்கத்
தனியாழி தனைநடத்துஞ் சயதுங்கன்
வாழ்கவென்றே. 8

கணபதி துதி

9.
காரணகா ரியங்களின்கட் டறுப்போர்
யோகக்
கருத்தென்னுந் தனித்தறியிற் கட்டக்
கட்டுண்
டாரணமா நாற்கூடத் தணைந்து
நிற்கும்
ஐங்கரத்த தொருகளிற்றுக் கன்பு
செய்வாம். 9

10.

தனித்தனியே திசையானைத் தறிக
ளாகச்
சயத்தம்பம் பலநாட்டி யொருகூ
டத்தே
அனைத்துலகுங் கவித்ததெனக்
கவித்து நிற்கும்
அருட்கவிகைக் கலிப்பகைஞன்
வாழ்க வென்றே. 10

முருகவேள் துதி

11.
பொன்னிரண்டு வரைதோற்கும்
பொருவரிய நிறம்படைத்த புயமுங்
கண்ணும்
பன்னிரண்டு மாறிரண்டும்
படைத்துடையான் அடித்தலங்கள்
பணிதல் செய்வாம். 11

12.
ஓரிரண்டு திருக்குலமும்
நிலைபெறவந் தொருகுடைக்கீழ்க்
கடலுந் திக்கும்
ஈரிரண்டு படைத்துடைய
விரவிகுலோத் தமனபயன் வாழ்க
வென்றே. 12

நாமகள் துதி

13.
பூமாதுஞ் சயமாதும் பொலிந்து
வாழும் புயத்திருப்ப மிகவுயரத்
திருப்ப ளென்று
நாமாதுங் கலைமாது மென்னச்
சென்னி நாவகத்து ளிருப்பாளை
நவிலு வாமே. 13

14.
எண்மடங்கு புகழ்மடந்தை நல்ல
னெங்கோன் யானவன்பா
லிருப்பதுநன் றென்பாள் போல
மண்மடந்தை தன்சீர்த்தி வெள்ளை
சாத்தி மகிழ்ந்தபிரான் வளவர்பிரான்
வாழ்க வென்றே. 14

உமையவள் துதி

15.
செய்யதிரு மேனியொரு பாதிகரி
தாகத்
தெய்வமுத னாயகனை யெய்தசிலை
மாரன்
கையின்மலர் பாதமலர் மீதுமணு
காநங்

கன்னிதன் மலர்க்கழல்கள்
சென்னிமிசை வைப்பாம். 15

16.
கறுத்தசெழி யன்கழல்சி வப்பவரை
யேறக்
கார்முகம்வ ளைத்துதியர்
கோமகன்மு டிக்கட்
பொறுத்தமலர் பாதமலர் மீதணிய
நல்கும்
பூழியர்பி ரானபயன் வாழ்கவினி
தென்றே. 16

சத்த மாதர்கள் துதி

17.
மேதி புள்ளலகை தோகை
யேறுவணம் வேழ மென்றகொடி

யேழுடைச்
சோதி மென்கொடிக ளேழி னேழிருது
ணைப்ப தந்தொழநி னைத்துமே. 17

18.
கேழன் மேழிகலை யாளி
வீணைசிலை கெண்டை
யென்றினைய பல்கொடி
தாழ மேருவிலு யர்த்த செம்பியர்த
னிப்பு லிக்கொடித ழைக்கவே. 18

வாழி

19.
விதிமறை யவர்தொழில் விளைகவே
விளைதலின் முகில்மழை
பொழிகவே
நிதிதரு பயிர்வளம் நிறைகவே

நிறைதலி னுயிர்நிலை பெறுகவே. 19

20.

தலமுத லுளமனு வளர்கவே சயதர
னுயர்புலி வளர்கவே
நிலவுமிழ் கவிகையும் வளர்கவே
நிதிபொழி கவிகையும் வளர்கவே.
20

---

## 2. கடை திறப்பு

உடல் அழகு

21.

சூதள வளவெனு மிளமுலைத்
துடியள வளவெனு நுண்ணிடைக்
காதள வளவெனு மதர்விழிக் கடலமு

தனையவர் திறமினோ. 1

மார்பழகு

22.
புடைபட விளமுலை வளர்தொறும்
பொறையறி வுடையரு நிலைதளர்ந்
திடைபடு வதுபட வருளுவீர் இடுகத
வுயர்கடை திறமினோ. 2

நடை அழகு

23.
சுரிகுழ லசைவுற வசைவுறத்
துயிலெழு மயிலென மயிலெனப்
பரிபுர வொலியெழ வொலியெழப்
பனிமொழி யவர்கடை திறமினோ. 3

ஊடிய மகளிர்

24.
கூடிய வின்கன வதனிலே கொடைநர
துங்கனொ டணைவுறா
தூடிய நெஞ்சினொ டூடுவீர் உமது
நெடுங்கடை திறமினோ. 4

விடுமின் பிடிமின்

25.
விடுமி னெங்கள்துகில் விடுமி
னென்றுமுனி வெகுளி மென்குதலை
துகிலினைப்
பிடிமி னென்றபொருள் விளைய
நின்றருள்செய் பெடைந லீர்கடைகள்
திறமினோ. 5

கனவா நனவா

26.
எனத டங்கவினி வளவர் துங்கனருள்
எனம கிழ்ந்திரவு கனவிடைத்
தனத டங்கண்மிசை நகந டந்தகுறி
தடவு வீர்கடைகள் திறமினோ. 6

ஊடலும் கூடலும்

27.
முனிபவ ரொத்திலராய் முறுவல்கி
ளைத்தலுமே
முகிழ்நகை பெற்றமெனா மகிழ்நர்
மணித்துவர்வாய்
கனிபவ ளத்தருகே வருதலு
முத்துதிருங்
கயல்க ளிரண்டுடையீர் கடைதிற

மின்றிறமின். 7

பொய்த் துயில்

28.
இத்துயின் மெய்த்துயிலே என்றுகு
றித்திளைஞோர்
இதுபுல விக்குமருந் தெனமனம்
வைத்தடியிற்
கைத்தலம் வைத்தலுமே
பொய்த்துயில் கூர்நயனக்
கடைதிற வாமடவீர் கடைதிற
மின்றிறமின். 8

கனவில் பெற முயல்தல்

29.
இகலி ழந்தரசர் தொழவ ரும்பவனி

இரவுகந் தருளு கனவினிற்
பகலி ழந்தநிறை பெறமு
யன்றுமொழி பதறு வீர்கடைகள்
திறமினோ. 9

முத்துமாலையும் பவளமாலையும்

30.
முத்து வடஞ்சேர் முகிழ்முலைமேன்
முயங்குங் கொழுநர்
மணிச்செவ்வாய்
வைத்த பவள வடம்புனைவீர்
மணிப்பொற் கபாடந் திறமினோ. 10

ஆத்திமாலையின் மேல் ஆசை

31.
தண்கொடை மானதன் மார்புதோய்

தாதகி மாலையின் மேல்விழுங்
கண்கொடு போம்வழி தேடுவீர்
கனகநெ டுங்கடை திறமினோ. 11

படைக்கும் கண்களுக்கும் ஒப்புமை

32.
அஞ்சியே கழல்கெடக் கூடலிற்
பொருதுசென்
றணிகடைக் குழையிலே விழவடர்த்
தெறிதலால்
வஞ்சிமா னதன்விடும் படையினிற்
கொடியகண்
மடநலீ ரிடுமணிக் கடைதிறந்
திடுமினோ. 12

கூடலில் தோன்றும் நிகழ்ச்சிகள்

33.

அவசமுற் றுளநெகத் துயினெகப்
பவளவாய்
அணிசிவப் பறவிழிக் கடைசிவப்
புறநிறைக்
கவசமற் றிளநகை களிவரக்
களிவருங்
கணவரைப் புணருவீர் கடைதிறந்
திடுமினோ. 13

கலவி மயக்கம்

34.

கலவிக் களியின் மயக்கத்தாற்
கலைபோ யகலக் கலைமதியின்
நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர்
நீள்பொற் கபாடந் திறமினோ. 14

நனவும் கனவும்

35.
நனவினிற் சயதரன் புணரவே
பெறினுநீர்
நனவெனத் தெளிவுறா ததனையும்
பழையவக்
கனவெனக் கூறுவீர் தோழிமார்
நகைமுகங்
கண்டபின் தேறுவீர் கடைதிறந்
திடுமினோ. 15

மகளிர் உறங்காமை

36.
மெய்யே கொழுநர் பிழைநலிய
வேட்கை நலிய விடியளவும்
பொய்யே யுறங்கு மடநல்லீர்

புனைபொற் கபாடந் திறமினோ. 16

கொழுநர் மார்பில் துயில்

37.
போக வமளிக் களிமயக்கிற் புலர்ந்த
தறியா தேகொழுநர்
ஆக வமளி மிசைத்துயில்வீர்
அம்பொற் கபாடந் திறமினோ. 17

பிரிவாற்றாமை

38
ஆளுங் கொழுநர் வரவுபார்த்
தவர்தம் வரவு காணாமல்
தாளூ மனமும் புறம்பாகச் சாத்துங்
கபாடந் திறமினோ. 18

ஒன்றில் இரண்டு

39.
உந்திச் சுழியின் முளைத்தெழுந்த
உரோமப் பசுந்தா ளொன்றிலிரண்
டுந்திக் கமலங் கொடுவருவீர்
அம்பொற் கபாடந் திறமினோ. 19

சிறைப்பட்ட மகளிர் நிலை

40.
மீனம்புகு கொடிமீனவர் விழியம்புக
வோடிக்
கானம்புக வேளம்புகு மடவீர்கடை
திறமின். 20

மகளிரை கப்பப்பொருளாக
அளித்தல்

41.
அலைநாடிய புனனாடுடை
யயபயர்க்கிடு திறையா
மலைநாடியர் துளுநாடியர் மனையிற்
கடைதிறமின். 21

தோளைத் தழுவி விளையாடல்

42.
விலையி லாதவடம் முலையி
லாடவிழி குழையி லாடவிழை
கணவர்தோள்
மலையி லாடிவரு மயில்கள்
போலவரு மடந லீர்கடைகள்
திறமினோ. 22

கன்னடப் பெண்டிரின் பேச்சு

43.

மழலைத்திரு மொழியிற்சில வடுகுஞ் சிலதமிழுங்
குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின். 23

தழுவிய கை நழுவல்

44.

தழுவுங் கொழுநர் பிழைநலியத்
தழுவே லென்னத் தழுவியகை
வழுவ வுடனே மயங்கிடுவீர்
மணிப்பொற் கபாடந் திறமினோ. 24

மகளிர் புன்னகை

45.

வேகம் விளைய வருங்கொழுநர்
மேனி சிவந்த படிநோக்கிப்
போகம் விளைய நகைசெய்வீர்

புனைபொற் கபாடந் திறமினோ. 25

உறக்கத்திலும் முகமலர்ச்சி

46
சொருகு கொந்தளக மொருகை
மேலலைய ஒருகை கீழலைசெய்
துகிலொடே
திருவ னந்தலினு முகம லர்ந்துவரு
தெரிவை மீர்கடைகள் திறமினோ. 26

நெஞ்சம் களிப்பீர்

47
முலைமீது கொழுநர்கைந் நகமேவு
குறியை
முன்செல்வ மில்லாத வவர்பெற்ற
பொருள்போல்

கலைநீவி யாரேனு மில்லாவி டத்தே
கண்ணுற்று நெஞ்சங்க ளிப்பீர்கள்
திறமின். 27

மதர்விழி மாதர்

48
கடலில் விடமென வமுதென
மதனவேள் கருதி வழிபடு
படையொடு கருதுவார்
உடலி னுயிரையு முணர்வையும்
நடுவுபோய் உருவு மதர்விழி
யுடையவர் திறமினோ. 28

பிறைநிலவும் முழுநிலவும்

49
முறுவன் மாலையொடு தரள

மாலைமுக மலரின் மீதுமுலை
முகிழினுஞ்
சிறுநி லாவுமதின் மிகுநி லாவுமென
வருந லீர்கடைகள் திறமினோ. 29

திருகிச் செருகும் குழல் மாதர்

50

முருகிற் சிவந்த கழுநீரும் முதிரா
இளைஞர் ஆருயிருந்
திருகிச் செருகுங் குழன்மடவீர்
செம்பொற் கபாடந் திறமினோ. 30

கொழுநரை நினைந்தழும் பெண்கள்

51

மெய்யில ணைத்துருகிப் பையவ
கன்றவர்தா

மீள்வரெ னக்கருதிக் கூடல்வி
ளைத்தறவே
கையில ணைத்தமணற் கண்பனி
சோர்புனலிற்
கரையவி ழுந்தழுவீர் கடைதிற
மின்றிறமின். 31

ஊடன் மகளிர்

52
செருவிளை நீர்பட வெம்முலைச்
செவ்விளை நீர்படு சேயரிக்
கருவிளை நீர்பட வூடுவீர் கனகநெ
டுங்கடை திறமினோ. 32

நடந்துவரும் அழகு

53

அளக பாரமிசை யசைய மேகலைகள்
அவிழ வாபரண மிவையெலாம்
இளக மாமுலைக ளிணைய
ராமல்வரும் இயன லீர்கடைகள்
திறமினோ. 33

இதழ் சுவைத்தல்

54
மதுர மானமொழி பதற வாள்விழிசி
வப்ப வாயிதழ்வெ ளுப்பவே
அதர பானமது பான மாகவறி வழியு
மாதர்கடை திறமினோ. 34

வேதும் மருந்தும்

55
தங்குகண் வேல்செய்த புண்களைத்

தடமுலை வேதுகொண் டொற்றியுஞ்
செங்கனி வாய்மருந் தூட்டுவீர்
செம்பொ னெடுங்கடை திறமினோ.
35

வேதும் கட்டும்

56
பொருங்கண் வேலிளைஞர் மார்பி
னூடுருவு புண்கள் தீரவிரு
கொங்கையின்
கருங்கண் வேதுபட வொற்றி
மென்கைகொடு கட்டு மாதர்கடை
திறமினோ. 36

விழுதலும் எழுதலும்

57

இடையி னிலையரி திறுமிறு
மெனவெழா எமது புகலிட
மினியிலை யெனவிழா
அடைய மதுகர மெழுவது
விழுவதாம் அளக வனிதைய
ரணிகடை திறமினோ. 37

சிலம்புகள் முறையிடல்

58

உபய தனமசையி லொடியு
மிடைநடையை ஒழியு
மொழியுமென வொண்சிலம்
பபய மபயமென வலற
நடைபயிலும் அரிவை மீர்கடைகள்
திறமினோ. 38

பெண்ணுக்கும் பொன்னிக்கும்

ஒப்புமை
59
பூவிரி மதுகரம் நுகரவும் பொருகய
லிருகரை புரளவுங்
காவிரி யெனவரு மடநலீர் கனகநெ
டுங்கடை திறமினோ. 39

வண்டுகள் கூந்தலிற் பந்தலிடல்
60
களப வண்டலிடு கலச
கொங்கைகளின் மதியெ ழுந்துகனல்
சொரியுமென்
றளக பந்திமிசை யளிகள் பந்தரிடும்
அரிவை மீர்கடைகள் திறமினோ. 40

விழி சிவக்கும் உதடு வெளுக்கும்

61

வாயிற் சிவப்பை விழிவாங்க
மலர்க்கண் வெளுப்பை
வாய்வாங்கத்
தோயக் கலவி யமுதளிப்பீர் துங்கக்
கபாடந் திறமினோ. 41

கலவியில் நிகழ்வன

62
கூடு மிளம்பிறையிற் குறுவெயர்
முத்துருளக்
கொங்கை வடம்புரளச் செங்கழு
நீரளகக்
காடு குலைந்தலையக் கைவளை
பூசலிடக்
கலவி விடாமடவீர் கடைதிற
மின்றிறமின். 42

காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்தது

63
காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த
கலவி மடவீர் கழற்சென்னி
காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ. 43

கருணாகரனின் போர்ச்சிறப்பு

64
இலங்கை யெறிந்த கருணா கரன்றன்
இகல்வெஞ் சிலையின் வலிகேட்டீர்
கலிங்க மெறிந்த கருணா கரன்றன்
களப்போர் பாடத் திறமினோ. 44

நினைவும் மறதியும்

65

பேணுங் கொழுநர் பிழைகளெலாம்
பிரிந்த பொழுது நினைந்தவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்
கனப்பொற் கபாடந் திறமினோ. 45

உறவாடும் மாதர்

66

வாச மார்முலைகண் மார்பி லாடமது
மாலை தாழ்குழலின் வண்டெழுந்
தூச லாடவிழி பூச லாடவுற வாடு
வீர்கடைகள் திறமினோ. 46

வாய் புதைக்கும் மடநல்லீர்

67

நேயக் கலவி மயக்கத்தே நிகழ்ந்த

மொழியைக் கிளியுரைப்ப
வாயைப் புதைக்கு மடநல்லீர்
மணிப்பொற் கபாடந் திறமினோ. 47

மதியொளிக்கு நடுங்குவீர்

68
பொங்கு மதிக்கே தினநடுங்கிப்
புகுந்த வறையை நிலவறையென்
றங்கு மிருக்கப் பயப்படுவீர்
அம்பொற் கபாடந் திறமினோ. 48

தேயும் குடுமி

69
வருவார் கொழுந ரெனத்திறந்தும்
வாரார் கொழுந ரெனவடைத்துந்

திருகுங் குடுமி விடியளவுந் தேயுங்
கபாடந் திறமினோ. **49**

புலவியும் கலவியும்

**70**
ஊடு வீர்கொழுநர் தங்கள்
பான்முனிவொ ழிந்து கூடுதலி
னுங்களைத்
தேடு வீர்கடைகள் திறமி னோவினிய
தெரிவை மீர்கடைகள் திறமினோ. **50**

கண்ணின் இயல்பு

**71**
பண்படு கிளவியை யமுதெனப்
பரவிய கொழுநனை நெறிசெயக்
கண்கொடு கொலைசெய வருளுவீர்

கனக நெடுங்கடை திறமினோ. 51

தரையில் விரல் எழுதுவீர்

72
பிழைநி னைந்துருகி யணைவு
றாமகிழ்நர் பிரித லஞ்சிவிடு
கண்கணீர்
மழை ததும்பவிரல் தரையி
லேயெழுதும் மடந லீர்கடைகள்
திறமினோ. 52

குலோத்துங்கன் போன்றீர்

73
நக்காஞ் சிக்கும் வடமலைக்கும்
நடுவில் வெளிக்கே வேடனைவிட்
டக்கா னகத்தே யுயிர்பறிப்பீர்

அம்பொற் கபாடந் திறமினோ. 53

பூவும் உயிரும் செருகுவீர்

74
செக்கச் சிவந்த கழுநீருஞ் செகத்தி
லிளைஞ ராருயிரும்
ஒக்கச் செருகுங் குழன்மடவீர்
உம்பொற் கபாடந் திறமினோ. 54

---

## காடு பாடுவோம்

75
களப்போர் விளைந்த கலிங்கத்துக்
கலிங்கர் நிணக்கூழ் களப்பேயின்
உளப்போ ரிரண்டு நிறைவித்தாள்
உறையுங் காடு பாடுவாம். 1

மரம் செடி கொடிகள்

76
பொரிந்த காரைக ரிந்த சூரைபு கைந்த
வீரையெ ரிந்தவேய்
உரிந்த பாரையெ றிந்த பாலையு
லர்ந்த வோமைக லந்தவே. 2

77
உதிர்ந்த வெள்ளிலு ணங்கு
நெல்லியொ டுங்கு துள்ளியு
லர்ந்தவேல்
பிதிர்ந்த முள்ளிசி தைந்த வள்ளிபி
ளந்த கள்ளிப பரந்தவே. 3

78
வற்றல் வாகைவ றந்த கூகைம டிந்த

தேறுபொ டிந்தவேல்
முற்ற லீகைமு ளிந்த விண்டுமு ரிந்த
புன்குநி ரைந்தவே. 4

பரிதியின் செயல்

79
தீய வக்கொடிய கான கத்தரைதி றந்த
வாய்தொறுநு ழைந்துதன்
சாயை புக்கவழி யாதெ னப்பரிதி
தன்க ரங்கொடுதி ளைக்குமே. 5

நிழல் இல்லாமை

80
ஆடு கின்றசிறை வெம்ப ருந்தினிழல்
அஞ்சி யக்கடுவ னத்தைவிட்
டோடு கின்றநிழ லொக்கும்

நிற்கும்நிழல் ஓரி டத்துமுள
வல்லவே. 6

நிழலின் செயல்

81
ஆத வம்பருகு மென்று நின்றநிழல்
அங்கு நின்றுகுடி போனதப்
பாத வம்புனல்பெ றாது ணங்குவன
பருகும் நம்மையென வெருவியே. 7

நெருப்பும் புகையும்

82
செந்நெ ருப்பினைத் தகடு செய்துபார்
செய்த தொக்குமச் செந்த ரைப்பரப்
பந்நெ ருப்பினிற் புகைதி ரண்டதொப்
பல்ல தொப்புறா வதனி டைப்புறா. 8

நிலத்தில் நீரின்மை

83
தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்
சிந்தை கூரவாய் வெந்து வந்துசெந்
நாயின் வாயினீர் தன்னை நீரெனா
நவ்வி நாவினால் நக்கி விக்குமே. 9

நிலத்தின் வெம்மை

84
இந்நி லத்துளோ ரேக லாவதற்
கிளைய தானமோ வரிய வானுளோர்
அந்நி லத்தின்மேல் வெம்மை
யைக்குறித் தல்ல வோநிலத் தடியி
டாததே. 10

இரவியும் இருபொழுதும்

85
இருபொழுது மிரவிபசும் புரவிவிசும்
பியங்காத தியம்பக் கேண்மின்
ஒருபொழுதுந் தரித்தன்றி யூடுபோ
கரிதணங்கின் காடென் றன்றோ. 11

பனிநீரும் மழைநீரும் வியர்வை நீரே

86
காடிதனைக் கடத்துமெனக்
கருமுகிலும் வெண்மதியுங் கடக்க
வப்பால்
ஓடியிளைத் துடல்வியர்த்த
வியர்வன்றோ உகுபுனலும் பனியு
மையோ. 12

87
விம்முகடு விசைவனத்தின்
வெம்மையினைக் குறித்தன்றோ
விண்ணோர் விண்ணின்
மைம்முகடு முகிற்றிரையிட்
டமுதவட்ட வாலவட்ட மெடுப்ப
தையோ. 13

பேயின் மூச்சும் மரத்தின் புகையும்

88
நிலம்புடைபேர்ந் தோடாமே
நெடுமோடி நிறுத்தியபேய்
புலம்பொடுநின் றுயிர்ப்பனபோல்
புகைந்துமரங் கரிந்துளவால். 14

வறண்ட நாக்கும் முதிய பேயும்

89

வற்றியபேய் வாயுலர்ந்து
வறள்நாக்கை நீட்டுவபோல்
முற்றியநீண் மரப்பொதும்பின்
முதுப்பாம்பு புறப்படுமே. 15

சூறாவளியின் இயல்பு

90

விழிசுழல வருபேய்த்தேர்
மிதந்துவரு நீரந்நீர்ச்
சுழிசுழல வருவதெனச் சூறைவளி
சுழன்றிடுமால். 16

நீறு பூத்த நெருப்பு

91

சிதைந்தவுடற் சுடுசுடலைப்
பொடியைச் சூறை சீத்தடிப்பச்
சிதறியவப் பொடியாற் செம்மை
புதைந்தமணி புகைபோர்த்த தழலே
போலும் போலாவேற் பொடிமூடு
தணலே போலும். 17

முத்து சொரிதல் கண்ணீர் பொழிதல்

92

மண்ணோடி யறவறந்து துறந்தங்
காந்த
வாய்வழியே வேய்பொழியு முத்த
மவ்வேய்
கண்ணோடிச் சொரிகின்ற கண்ணீ
ரன்றேற்
கண்டிரங்கிச் சொரிகின்ற கண்ணீர்
போலும். 18

முத்துக்கள் கொப்புளங்கள்

93
வெடித்தகழை விசைதெறிப்பத்
தரைமேன் முத்தம்
வீழ்ந்தனவத் தரைபுழுங்கி யழன்று
மேன்மேற்
பொடித்தவியர்ப் புள்ளிகளே
போலும் போலும்
போலாவேற் கொப்புளங்கள்
போலும் போலும். 19

காற்றின் தன்மை

94
பல்கால்திண் திரைக்கரங்கள்
கரையின் மேன்மேற்

பாய்கடல்கள் நூக்குமதப் படர்வெங்
கானில்
செல்காற்று வாராமல் காக்க வன்றோ
திசைக்கரியின் செவிக்காற்று மதற்கே
யன்றோ. 20

வெந்தவனமே இந்தவனம்

95
முள்ளாறுங் கல்லாறுந் தென்ன ரோட
முன்னொருநாள் வாளபயன் முனிந்த
போரின்
வெள்ளாறுங் கோட்டாறும்
புகையான் மூட வெந்தவன
மிந்தவன மொக்கி லொக்கும். 21

மணலின் தன்மை

96

அணிகொண்ட குரங்கினங்கள்
அலைகடலுக் கப்பாலை
மணியொன்று காணாமல்
வரையெடுத்து மயங்கினவே. 22

---

## 4. கோயில் பாடியது

பழையகோயிலும் புதியகோயிலும்

97

ஓதி வந்தவக் கொடிய கானகத்
துறைய ணங்கினுக் கயன்வ குத்தவிப்
பூத லம்பழங் கோயி லென்னினும்
புதிய கோயிலுண் டதுவி ளம்புவாம்.
1

புதிய கோயிலுக்குக் கடைக்கால்

98
வட்ட வெண்குடைச் சென்னி
மானதன் வாளின் வாயினான் மறலி
வாயிடைப்
பட்ட மன்னர்தம் பட்ட மங்கையர்
பரும ணிக்கருத் திருவி ருத்தியே. 2

கோயில் இயல்பு

99
துவர்நி றக்களிற் றுதிய ரேவலிற்
சுரிகை போர்முகத் துருவி நேரெதிர்த்
தவர்நி ணத்தொடக் குருதி நீர்குழைத்
தவர்க ருந்தலைச் சுவர டுக்கியே. 3

தூணும் உத்தரமும்

100
அறிஞர் தம்பிரா னபயன் வாரணம்
அரசர் மண்டலத் தரண றப்பறித்
தெறித ரும்பெருங் கணைம
ரங்கள்கொண் டெழுது தூணொடு த்
திரமி யற்றியே. 4

கை மரமும் பரப்பு மரமும்

101
கடித ழிந்துபோர் மிதிலை யிற்படுங்
கரிம ருப்பினைத் திரள் துலாமெனும்
படிப ரப்பியப் பரும யானையின்
பழுவெ லும்பினிற் பாவ டுக்கியே. 5

மேல் முகடு
102

மீளி மாவுகைத் தபயன்
முன்னொர்நாள் விருத ராசரைப்
பொருது கொண்டபோர்
ஆளி வாரணங் கேழல் சீயமென்
றவை நிரைத்துநா சிகையி ருத்தியே.
6

வெற்றிடத்தை மூடுதல்
103
துங்க பத்திரைச் செங்க ளத்திடைச்
சோள சேகரன் வாளெ றிந்தபோர்
வெங்க தக்களிற் றின்ப டத்தினால்
விளைய டங்கவே மிசைக விக்கவே.
7

கோபுரமும் நெடுமதிலும்
104
கொள்ளிவாய்ப் பேய்காக்குங்

கோபுரமு நெடுமதிலும்
வெள்ளியாற் சமைத்ததென
வெள்ளெலும்பி னாற்சமைத்தே. 8

கோயில் வாயிலில் மகரதோரணம்

105
காரிரும்பின் மகரதோ ரணமாகக்
கரும்பேய்கள்
ஓரிரண்டு கால்நாட்டி யோரிரும்பே
மிசைவளைத்தே. 9

மதில்களின் காட்சி

106
மயிற்கழுத்துங் கழுத்தரிய
மலர்ந்தமுகத் தாமரையு மருங்கு
சூழ்ந்த

எயிற்கழுத்து நிணக்கொடியு
மிளங்குழவிப் பசுந்தலையு மெங்குந்
தூக்கி. 10

மதுரையின் மகரதோரணம்

107
பணியாத வழுதியர்தம்
பாய்களிற்றின் செவிச்சுளகு பலவுந்
தூக்கி
மணியூச லெனமதுரை மகரதோ
ரணம்பறித்து மறித்து நாட்டி. 11

ஈம விளக்கு

108
பரிவிருத்தி யலகிட்டுப் பசுங்குருதி
நீர்தெளித்து நிணப்பூச் சிந்தி

எரிவிரித்த ஈமவிளக் கெம்மருங்கும்
ஏற்றியதோ ரியல்பிற் றாலோ. 12

வீரர்களின் பேரொலி

109
சலியாத தனியாண்மைத் தறுகண்
வீரர் தருகவரம் வரத்தினுக்குத் தக்க
தாகப்
பலியாக வுறுப்பரிந்து தருது மென்று
பரவுமொலி கடலொலிபோற்
பரக்குமாலோ. 13

வீர வழிபாடு

110
சொல்லரிய ஓமத்தீ வளர்ப்ப ராலோ
தொழுதிருந்து பழுவெலும்பு தொடர

வாங்கி
வல்லெரியின் மிசையெரிய விடுவ
ராலோ வழிகுருதி நெய்யாக வார்ப்ப
ராலோ. 14

தலை துதிக்கும் முண்டம் வழிபடும்

111

அடிக்கழுத்தி னெடுஞ்சிரத்தை யரிவ
ராலோ
அரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்ப
ராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைப்
பரவு மாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்கு
மாலோ. 15

அச்சுறுத்தும் தலைகள்

112
நீண்டபலி பீடத்தி லரிந்து வைத்த
நெடுங்குஞ்சிச் சிரத்தைத்தன்
னினமென் றெண்ணி
ஆண்டலைப்புள் ளருகணைந்து
பார்க்கு மாலோ
அணைதலுமச் சிரமச்ச முறுத்து
மாலோ. 16

அஞ்சி அலைந்தன

113
கடன மைந்ததுக ருந்தலைய ரிந்த
பொழுதே கடவ
தொன்றுமிலை யென்றுவிளை யாடு
முடலே

உடல்வி ழுந்திடினு கர்ந்திடவு வந்த
சிலபேய்
உறுபெ ரும்பசியு டன்றிடவு டன்றி
ரியுமே. 17

குரல் ஒலியும் வாத்திய ஒலியும்

114
பகடி டந்துகொள்ப சுங்குருதி யின்று
தலைவீ
பலிகொ ளென்றகுர லெண்டிசைபி
ளந்து மிசைவான்
முகடி டந்துருமெ றிந்தெனமு ழங்க
வுடனே
மொகுமொ கென்றொலிமி குந்தமரு
கங்கள் பலவே. 18

மெய்க் காப்பாளர்கள்

115

தமரு கங்கள்தரு கின்றசதி யின்கண் வருவார்
அமரி யின்புறும நாதிவரு சாத கர்களே. 19

யோகினிப் பெண்கள்

116

படைவ லங்கொடுப சுந்தலையி டங்கொ டணைவார்
இடைமொ ழிந்திடைநு டங்கவரு யோகி னிகளே. 20

பெருந்தலை கண்டு பேய் உறங்காமை

117

வீங்குதலை நெடுங்கழையின்
மிசைதோறுந் திசைதோறும் விழித்து
நின்று
தூங்குதலை சிரிப்பனகண்
டுறங்குதலை மறந்திருக்குஞ் சுழல்கட்
சூர்ப்பேய். 21

காலன் இடும் தூண்டில்

118

அரிந்ததலை யுடனமர்ந்தே
ஆடுகழை அலைகுருதிப் புனலின்
மூழ்கி
இருந்தவுடல் கொளக்கால னிடுகின்ற
நெடுந்தூண்டி லென்னத் தோன்றும்.
22

கொள்ளிவாய்ப் பேயின் தன்மை

119
கொல்வா யோரி முழவாகக் கொள்ளி
வாய்ப்பேய் குழவிக்கு
நல்வாய்ச் செய்ய தசைதேடி
நரிவாய்த் தசையைப் பறிக்குமால்.
23

கோயிலைச் சுற்றியுள்ள சுடலை

120
நிணமுந் தசையும் பருந்திசிப்ப
நெருப்பும் பருத்தி யும்பொன்று
பிணமும் பேயுஞ் சுடுகாடும்
பிணங்கு நரியு முடைத்தரோ. 24

## 5. தேவியைப் பாடியது

காளியின் வடிவழகு

121
உவையுவை யுளவென் றெண்ணி
உரைப்ப தெனுரைக்க வந்த
அவையவை மகிழ்ந்த மோடி
அவயவம் விளம்பல் செய்வாம். 1

பரிபுரம் விளங்கும் பாதம்

122
ஒருமலை மத்துவலத் துலவுக
யிற்றினுமற்
றுலகுப ரித்தபணத் துரகவ
டத்தினுமப்
பருமணி முத்துநிரைத் துடுமணி
தைத்தவிணைப்

பரிபுரம் வைத்ததளிர்ப் பதயுக
ளத்தினளே. 2

காளி தேவியின் குங்குமப்பொட்டு

123

அருமறை யொத்தகுலத் தருணெறி
யொத்தகுணத்
தபயனு தித்தகுலத் துபயகு
லத்துமுதல்
திருமதி யொக்குமெனத் தினகர
னொக்குமெனத்
திகழ்வத னத்தினிடைத் திலகவ
னப்பினளே. 3

சதிகொள் நடனம்

124

அரவொடு திக்கயமப் பொழுதுப
ரித்தவிடத்
தடியிட வுட்குழிவுற் றசைவுறு
மப்பொழுதில்
தரணித ரித்ததெனப் பரணிப
ரித்தபுகழ்ச்
சயதர னைப்பரவிச் சதிகொள்
நடத்தினளே. 4

பால் நிரம்பிய கிண்ணம்

125
தணிதவ ளப்பிறையைச் சடைமிசை
வைத்தவிடைத்
தலைவர்வ னத்தினிடைத் தனிநுகர்
தற்குநினைத்
தணிதவ ளப்பொடியிட் டடையவி
லச்சினையிட்

டமுதமி ருத்தியசெப் பனையத
னத்தினளே. 5

ஆடையும் இடைக்கச்சும்

126
பரிவக லத்தழுவிப் புணர்கல
விக்குருகிப்
படர்சடை முக்கணுடைப் பரமர்கொ
டுத்தகளிற்
றுரிமிசை அக்கரியிற் குடரொடு
கட்செவியிட்
டொருபுரி யிட்டிறுகப் புனையுமு
டுக்கையளே. 6

தேவியின் பிள்ளைகள்

127

கலைவள ருத்தமனைக் கருமுகி
லொப்பவனைக்
கரடத டக்கடவுட் கனகநி
றத்தவனைச்
சிலைவளை வுற்றவுணத்
தொகைசெக விட்டபரித்
திறலவ னைத்தருமத் திருவுத
ரத்தினளே. 7

## தேவியின் அணிகள்

128
கவளம தக்கரடக் கரியுரி
வைக்கயிலைக்
களிறுவி ருப்புறுமக் கனகமு
லைத்தரளத்
தவளவ டத்திடையிற் பவளமொ
டொத்தெரியத்

தழலுமி ழுத்தரியத் தனியுர
கத்தினளே. 8

காளியின் கைகள்

129
அரியுமி டற்றலையிட் டலைகுரு
திக்கெதிர்வைத்
தறவும டுத்தசிவப் பதனைமு
ழுத்திசையிற்
கரிகர டத்தொளையிற் கலுழியி
டைக்கழுவிக்
கருமைப டைத்தசுடர்க் கரகம லத்
தினளே. 9

தேவியின் உதடுகள்
130
சிமையவ ரைக்கனகத் திரளுரு

கப்பரவைத்
திரைசுவ றிப்புகையத் திசைசுடு
மப்பொழுதத்
திமையவ ரைத்தகைதற் கிருளுமி
டற்றிறைவற்
கினியத ரத்தமுதக் கனியத
ரத்தினளே. 10

சிவனின் பகை தீர்த்தவள்

131
உருகுத லுற்றுலகத் துவமைய
றச்சுழல்வுற்
றுலவுவி ழிக்கடைபட் டுடல்பகை
யற்றொழியத்
திருகுதலைக் கிளவிச் சிறுகுத
லைப்பவளச்
சிறுமுறு வற்றரளத் திருவத

னத்தினளே. 11

காதணிகளும் மாலைகளும்

132
அண்டமுறு குலகிரிகள்
அவளொருகா லிருகாதிற்
கொண்டணியிற் குதம்பையுமாம்
கோத்தணியின் மணிவடமாம். 12

தேவியின் ஆற்றல்

133
கைம்மலர்மே லம்மனையாம்
கந்துகமாங் கழங்குமாம்
அம்மலைக ளவள்வேண்டின் ஆகாத
தொன்றுண்டோ. 13

## **6.** பேய்களைப் பாடியது

காளியின் பெருமை

134
எவ்வணங்கு மடிவணங்க
இப்பெருமை படைத்துடைய
அவ்வணங்கை யகலாத
அலகைகளை யினிப்பகர்வாம். 1

பேய்களின் காலும் கையும்

135
பெருநெ டும்பசி பெய்கல மாவன
பிற்றை நாளின்முன் னாளின்மெ
லிவன
கருநெ டும்பனங் காடுமு ழுமையுங்
காலுங் கையுமு டையன போல்வன.
2

வாய் வயிறு முழங்கால்கள்

136
வன்பி லத்தொடு வாதுசெய் வாயின
வாயி னானிறை யாதவ யிற்றின
முன்பி ருக்கின்மு கத்தினு மேற்செல
மும்மு ழம்படு மம்முழந் தாளின. 3

பேய்களின் உடம்பு

137
வெற்றெ லும்பைந ரம்பின்வ
லித்துமேல் வெந்தி லாவிற கேய்ந்தவு
டம்பின
கொற்ற லம்பெறு கூழில மெங்களைக்
கொள்வ தேபணி யென்றுகு
ரைப்பன. 4

கன்னங்களும் விழிகளும்

138
உள்ளொ டுங்கியி ரண்டுமொன்
றாகவே ஒட்டி யொட்டுவி டாதகொ
டிற்றின
கொள்ளி கொண்டிரண் டேமுழை
யுட்புகிற் குன்று தோன்றுவ போலவி
ழிப்பன. 5

முதுகும் கொப்பூழும்

139
வற்ற லாகவு லர்ந்தமு துகுகள் மரக்க
லத்தின்ம றிபுற மொப்பன
ஒற்றை வான்றொளைப் புற்றெனப்
பாம்புடன் உடும்பு முட்புக்கு றங்கிடு

முந்திய. 6

உடல் மயிர் மூக்கு காது

140
பாந்தள் நால்வன போலுமு டல்மயிர்
பாசி பட்டப ழந்தொளை மூக்கின
ஆந்தை பாந்தி யிருப்பத்
துரிஞ்சில்புக் கங்கு மிங்குமு லாவு
செவியின. 7

பல் தாலி தலை உதடு

141
கொட்டும் மேழியுங் கோத்தன
பல்லின கோம்பி பாம்பிடைக்
கோத்தணி தாலிய
தட்டி வானைத் தகர்க்குந் தலையின

தாழ்ந்து மார்பிடைத் தட்டு முதட்டின.
8

தாய்ப்பேயும் பிள்ளைப்பேயும்

142
அட்ட மிட்ட நெடுங்கழை
காணிலென் அன்னை யன்னையென்
றாலுங் குழவிய
ஒட்ட ஒட்டகங் காணிலென்
பிள்ளையை ஒக்கு மொக்குமென்
றொக்கலை கொள்வன. 9

ஆற்றாத பசி

143
புயல ளிப்பன மேலும ளித்திடும்
பொற்க ரத் தப யன்புலி பின்செலக்

கயலொ ளித்தக டுஞ்சுரம் போலகங்
காந்து வெம்பசி யிற்புறந் தீந்தவும்.
10

## காளியைப் பிரியாத பேய்கள்

144

துஞ்ச லுக்கணித் தாமென முன்னமே
சொன்ன சொன்னது றைதொறும் பேயெலாம்
அஞ்ச லித்தொரு காலக லாமலவ்
வணங்கி னுக்கரு காகவி ருக்கவே.
11

## நொண்டிப் பேய்

145

ஆளைச் சீறுக ளிற்றப யன்பொரூஉம்
அக்க ளத்தில ரசர்சி ரஞ்சொரி
மூளைச் சேற்றில் வழுக்கி விழுந்திட
மொழிபெ யர்ந்தொரு கால்முட
மானவும். 12

கை ஒடிந்த பேய்

146

அந்த நாளக்க ளத்தடு கூழினுக்
காய்ந்த வெண்பல் லரிசி யுரற்புக
உந்து போதினிற் போதகக்
கொம்பெனும் உலக்கை பட்டுவ
லக்கைசொற் றானவும். 13

குருட்டுப் பேய்

147

விருத ராசப யங்கரன்
முன்னொர்நாள் வென்ற சக்கரக்
கோட்டத்தி டைக்கொழுங்
குருதி யுங்குட ருங்கலந் தட்டவெங்
கூழ்தெ றித்தொரு கண்குரு டானவும்.
14

ஊமைப் பேய்

148
வண்டல் பாய்பொன்னி நாடனை
வாழ்த்திமா மதுரை வெங்களத்
தேமது ரிக்கவட்
டுண்ட கூழொடு நாவுஞ்சு ருண்டுபுக்
குள்வி ழுந்தற ஊமைகள் ஆனவும்.
15

செவிட்டுப் பேய்

149
ஆனை சாயவ டுபரி யொன்றுகைத்
தைம்ப டைப்பரு வத்தப
யன்பொருஞ்
சேனை வீரர்நின் றார்த்திடு
மார்ப்பினில் திமிரி வெங்களத்
திற்செவி டானவும். 16

குட்டைப் பேய்

150
பண்டு தென்னவர் சாயவ தற்குமுன்
பணிசெய் பூதக ணங்கள
னைத்தையுங்
கொண்டு வந்தபேய் கூடிய போதிலக்
குமரி மாதர்பெ றக்குற ளானவும். 17

கூன் பேய்

151
பரக்கு மோதக்க டாரம ழித்தநாள்
பாய்ந்த செம்புன லாடியும் நீந்தியுங்
குரக்கு வாதம்பி டித்தவி தத்தினிற்
குடிய டங்கலுங் கூன்முது கானவும்.
18

கடல் விளையாட்டு

152
சிங்க ளத்தொடு தென்மது ராபுரி
செற்ற கொற்றவன் வெற்றிகொள் காலையே
வெங்க ளத்தில டுமடைப்
பேய்க்குலம் வேலை புக்குவி ரல்கள் திறந்தவும். 19

## 7. இந்திர சாலம்

### தீபக்கால் கட்டில்

153
இவ்வண்ணத் திருதிறமுந்
தொழுதிருப்ப எலும்பின்மிசைக்
குடர்மென் கச்சிற்
செவ்வண்ணக் குருதிதோய் சிறுபூதத்
தீபக்கால் கட்டி லிட்டே. 1

### பிண மெத்தை

154
பிணமெத்தை யஞ்சடுக்கிப்
பேயணையை முறித்திட்டுத் தூய

வெள்ளை
நிணமெத்தை விரித்துயர்ந்த
நிலாத்திகழும் பஞ்சசய னத்தின்
மேலே. 2

கொலு வீற்றிருத்தல்

155
கெடாதபடி கெடுஞ்செழியர்
கெடும்பொழுதின் இடும்பிண்டி பால
மேந்தி
இடாகினிக ளிருமருங்கு
மீச்சோப்பிப் பணிமாற விருந்த
போழ்தின். 3

கோயில் நாயகியை கும்பிடுதல்

156

அடல்நாக எலும்பெடுத்து நரம்பிற்
கட்டி அடிக்கடியும் பிடித்தமரின்
மடிந்த வீரர்
குடர்சூடி நிணச்சட்டை யிட்டு நின்ற
கோயில்நா யகிநெடும்பேய் கும்பிட்
டாங்கே. 4

காளியிடம் நெடும்பேய் கூறல்

157
சுரகுருவின் தூதாகி யமன்பாற்
செல்வோன் துணித்துவைத்த
சிரமன்று தின்ற பேயைச்
சிரமரிய வதற்குறவா யொளித்துப்
போந்த சிலபேயைத் திருவுள்ளத்
தறிதி யன்றே. 5

முதுபேயின் வருகை கூறல்

158
அப்பேயி னொருமுதுபேய் வந்து
நின்றிங் கடியேனை விண்ணப்பஞ்
செய்க வென்ற
திப்பேயிங் கொருதீங்குஞ் செய்த
தில்லை என்கொலோ திருவுள்ள
மென்னக் கேட்டே. 6

முதுபேய் மன்னிப்பு கேட்டல்

159
அழைக்க வென்றலும ழைக்க
வந்தணுகி அஞ்சி யஞ்சியுன
தாணையிற்
பிழைக்க வந்தனம்பொ றுத்தெ
மக்கருள்செய் பெண்ண ணங்கெனவ
ணங்கவே. 7

காளியின் அருள்மொழி

160
அருத்தி யிற்பிழைநி னைத்த
கூளியை யறுத்த வன்தலைய
வன்பெறப்
பொருத்தி யப்பிழைபொ றுத்த
னம்பிழை பொறாத தில்லையினி
யென்னவே. 8

முதுபேய் வேண்டல்

161
உய்ந்து போயினமு வந்தெ மக்கருள
ஒன்றொ டொப்பனவொ ராயிரம்
இந்த்ர சாலமுள கற்று வந்தனெ

னிருந்து காணென விறைஞ்சியே. 9

கண் கட்டு வித்தைகள்

162
ஏற நின்னிருதி ருக்கண்
வைத்தருள்செய் இக்கை யிற்சிலது
திக்கைபார்
மாறி இக்கையில ழைக்க மற்றவை
மதக்க ரித்தலைக ளானபார். 10

163
இக்க ரித்தலையின் வாயி னின்றுதிர
நீர்கு டித்துரு மிடித்தெனக்
கொக்க ரித்தலகை சுற்ற மற்றிவை
குறைத்த லைப்பிணம் மிதப்பபார். 11

164

அடக்க மன்றிது கிடக்க
வெம்முடைய அம்மை வாழ்கவென
வெம்மைபார்
கடக்க மென்றபயன் வென்றி
வென்றிகொள் களப் பெரும்பரணி
யின்றுபார். 12

165
துஞ்சி வீழ்துரக ராசி பாருடல்
துணிந்து வீழ்குறை துடிப்பபார்
அஞ்சி யோடும்மத யானை பாருதிர
ஆறு மோடுவன நூறுபார். 13

166
அற்ற தோளிவை யலைப்ப பாருவை
யறாத நீள்குடர் மிதப்பபார்
இற்ற தாள்நரி யிழுப்ப பாரடி
யிழுக்கும் மூளையில் வழுக்கல்பார்.

14

167
நிணங்கள் பார்நிண மணங் கனிந்தன
நிலங்கள் பார்நில மடங்கலும்
பிணங்கள் பாரிவை கிடக்க
நம்முடைய பேய லாதசில பேய்கள்
பார். 15

வித்தை கண்ட பேய்களின் மயக்கம்
168
என்ற போதிலிவை மெய்யெ னாவுட
னிருந்த பேய்பதறி யொன்றன்மேல்
ஒன்று கால்முறிய மேல்வி
ழுந்தடிசில் உண்ண
வெண்ணிவெறும் மண்ணின்மேல்.
16

169

விழுந்துகொ ழுங்குரு திப்புன
லென்றுவெ றுங்கைமு கந்துமுகந்
தெழுந்து விழுந்தசை யென்று
நிலத்தை யிருந்து துழாவிடுமே. 17

170

சுற்ற நிணத்துகில் பெற்றன மென்றுசு
லாவுவெ றுங்கையவே
அற்ற குறைத்தலை யென்று
விசும்பை யதுக்கு மெயிற்றினவே.
18

171

கயிற்றுறி யொப்பதொர் பேய்வறி
தேயுடல் கெளவின தொக்கவிரைந்
தெயிற்றை யதுக்கி நிலத்திடைப்
பேய்கள் நிறைத்தன மேல்விழவே.

19

172
முறம்பல போல நகங்கள் முறிந்து
முகஞ்சித றாமுதுகுந்
திறம்பலி லாவிறல் யோகினி மாதர்
சிரித்துவி லாவிறவே. 20

பேய்கள் வேண்டுதல்

173
அக்கண மாளு மணங்கினை
வந்தனை செய்துக ணங்களெலாம்
இக்கண மாளுமி னித்தவிர்
விச்சையெ னக்கைவி திர்த்தலுமே.
21

முதுபேயின் வேண்டுகோள்

174
கொற்றவர்கோன் வாளபய னறிய
வாழுங்
குவலயத்தோர் கலையனைத்துங் கூற
வாங்கே
கற்றுவந்தார் கற்றவவன் காணு
மாபோல்
கடைபோகக் கண்டருளென் கல்வி
யென்றே. 22

தாயின்மேல் ஆணை
175
வணங்குதலுங் கணங்களெலா மாயப்
பாவி
மறித்தெம்மை மறுசூடு சுடுவை
யாகில்
அணங்கரசி னாணையென அணங்கு

மிப்போ
தவைதவிரெங் கிவைகற்றா யென்ன
வாங்கே. 23

முதுபேய் வரலாறு
176
நின்முனிவுஞ் சுரகுருவின் முனிவு
மஞ்சி
நிலையரிதென் றிமகிரிபுக் கிருந்தேற்
கௌவை
தன்முனிவு மவன்முனிவுந் தவிர்க
வென்று
சாதனமந் திரவிச்சை பலவுந் தந்தே.
24

177
உன்னுடைய பழவடியா ரடியாள்
தெய்வ

உருத்திரயோ கினியென்பா ளுனக்கு நன்மை
இன்னுமுள கிடைப்பனவிங் கிருக்க வென்ன
யானிருந்தேன் சிலகால மிருந்த நாளில். 25

---

## 8. இராச பாரம்பரியம்

### இமயத்தில் புலிக்கொடி

178
செண்டு கொண்டுகரி காலனொரு காலி னிமயச்
சிமய மால்வரை திரித்தருளி மீள வதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று

முதுகிற்
பாய்பு லிக்குறிபொ றித்தது மறித்த
பொழுதே. 1

நாரதர் கூறல்

179
கால மும்மையுமு ணர்ந்தருளு நார
தனெனுங்
கடவுள் வேதமுனி வந்துகடல் சூழ்பு
வியில்நின்
போலு மன்னருள ரல்லரென ஆசி
புகலாப்
புகல்வ தொன்றுளது கேளரச வென்று
புகல்வான். 2

விநாயகர் பாரதம் எழுதினார்

180
பண்டு பாரதமெ னுங்கதை பராச
ரன்மகன்
பகர வெங்கரிமு கன்பரு மருப்பை
யொருகைக்
கொண்டு மேருசிக ரத்தொரு புறத்தி
லெழுதிக்
குவல யம்பெறு தவப்பய னுரைப்ப
வரிதால். 3

181
பார தத்தினுள வாகிய பவித்ர
கதையெம்
பரம னற்சரிதை மெய்ப்பழைய
நான்ம றைகளே
நேர தற்கிதனை நான்மொழிய நீயு
மெழுதி
நெடிய குன்றின்மிசை யேயிசைவ

தான கதையே. 4

இதுவும் வேதம் ஆகும்

182
அதன் முதற்கண்வரு மாதிமுதன்
மாய னிவனே
அப்ர மேயமெனு மெய்ப்ரியம தாக
வுடனே
பதமு மிப்பதம் வகுக்கவரு பாத
மதுவும்
பாத மானசில பார்புகழ வந்த
அவையும். 5

183
அந்த முட்பட விருக்குமவ் விருக்கின்
வழியே
ஆகி வந்தவவ் வருக்கமும் வருக்க

முழுதும்
வந்த அட்டகமு மொட்டரிய சங்கி
தைகளும்
வாய்மை வேதியர்கள் தாம்விதி
யெனும் வகையுமே. 6

184
கமல யோனிமுத லாகவரு முங்கள்
மரபிற்
காவன் மன்னவர்க ளாகிவரு கின்ற
முறையால்
அமல வேதமிது காணுமிதி லார
ணநிலத்
தமல னேயபய னாகிவரு கென்ற
ருளியே. 7

நாரதர் இருப்பிடம் செல்லல்

185

அரணி வேள்வியி லகப்படு மகண்ட
வுருவாய்
அரவ ணைத்துயிலு மாதிமுத லாக
வபயன்
தரணி காவலள வுஞ்செல மொழிந்து
முனிவன்
தானெ ழுந்தருள மாமுனி மொழிந்த
படியே. 8

நாரதர் கூறிய வரலாறு

186

ஆதி மாலமல நாபிகம லத்த யனுதித்
தயன் மரீசியெனும் அண்ணலை
யளித்த பரிசுங்
காதல் கூர்தரு மரீசிமக னாகி வளருங்
காசி பன்கதி ரருக்கனை யளித்த

பரிசும். 9

187
அவ்வ ருக்கன்மக னாகிமனு மேதினி புரந்
தரிய காதலனை யாவினது கன்று நிகரென்
றெவ்வ ருக்கமும் வியப்பமுறை செய்த கதையும்
இக்கு வாகுவிவன் மைந்தனென வந்த பரிசும். 10

188
இக்கு வாகுவின் மகன்புதல்வ னான வுரவோன்
இகலு வோனிகலு ரஞ்செய்து புரந்த ரனெனுஞ்
சக்கு வாயிர முடைக்களிறு வாகன

மெனத்
தானி ருந்துபொரு தானவரை வென்ற
சயமும். 11

189
ஒருது றைப்புனல்சி னப்புலியு மானு
முடனே
உண்ண வைத்தவுர வோனுலகில்
வைத்த அருளும்
பொருது றைத்தலைபு குந்துமுசு குந்த
னிமையோர்
புரம டங்கலுமரண்செய்து புரந்த
புகழும். 12

190
கடல் கலக்கவெழு மின்னமுது
தன்னை யொருவன்
கடவுள் வானவர்க ளுண்ணவருள்

செய்த கதையும்
உடல்க லக்கற அரிந்துதசை யிட்டு
மொருவன்
ஒருது லைப்புறவொ டொக்கநிறை
புக்க புகழும். 13

191
சுராதி ராசன்முத லாகவரு சோழன்
முனநாள்
சோழ மண்டலம மைத்தபிற கேழு
லகையும்
இராச கேசரிபு ரந்துபர கேச ரிகளாம்
இருவ ராணைபுலி ஆணையென
நின்ற இதுவும். 14

192
கால னுக்கிது வழக்கென வுரைத்த
அவனும்

காவி ரிப்புனல்கொ ணார்ந்தவவ
னும்பு வனியின்
மேல னைத்துயிரும் வீவதிலை யாக
நமன்மேல்
வென்றி கொண்டவனு
மென்றிவர்கள் கொண்ட விறலும். 15

193
புலியெ னக்கொடியி லிந்திரனை
வைத்த அவனும்
புணரி யொன்றினிடை யொன்றுபுக
விட்ட அவனும்
வலியி னிற்குருதி யுண்கென வளித்த
அவனும்
வாத ராசனைவ லிந்துபணி கொண்ட
அவனும். 16

194

தேங்கு தூங்கெயிலெ றிந்தவவ
னுந்தி ரள்மணிச்
சுடர்வி மானமது வான்மிசையு யர்த்த
அவனும்
தாங்கள் பாரதமு டிப்பளவும் நின்று
தருமன்
தன்க டற்படைத னக்குதவி செய்த
அவனும். 17

195

தளவ ழிக்குநகை வேல்விழி
பிலத்தின் வழியே
தனிந டந்துரகர் தங்கண்மணி
கொண்ட அவனும்
களவ ழிக்கவிதை பொய்கையுரை
செய்ய உதியன்
கால்வ ழித் தளையை வெட்டியர
சிட்ட அவனும். 18

கரிகால் வளவன்

196
என்று மற்றவர்கள் தங்கள்சரி தங்கள்
பலவும்
எழுதி மீளவிதன் மேல்வழுதி சேரன்
மடியத்
தன்ற னிக்களி றணைந்தருளி வீர
மகள்தன்
தனத டங்களொடு தன்புய மணைந்த
பரிசும். 19

197
தொழுது மன்னரே கரைசெய்
பொன்னியில்
தொடர வந்திலா முகரி யைப்படத்
தெழுது கென்றுகண் டிதுமி

கைக்கணென்
றிங்க ழிக்கவே அங்க ழிந்ததும். 20

198
தத்து நீர்வரால் குருமி வென்றதுந்
தழுவு செந்தமிழ்ப் பரிசில்
வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை
கொண்டதும். 21

199
ஒருவர் முன்னொர்நாள் தந்து
பின்செலா
உதியர் மன்னரே மதுரை மன்னரென்
றிருவர் தம்மையுங் கிழிகள் சுற்றுவித்
தெரிவி ளக்குவைத் திகல்வி

ளைத்ததும். 22

முதலாம் பராந்தகன்

200
வேழ மொன்றுகைத் தாலி
விண்ணின்வாய் விசைய டங்கவு
மசைய வென்றதும்
ஈழ முந்தமிழ்க் கூடலுஞ் சிதைத்
திகல்க டந்ததோ ரிசைப ரந்ததும். 23

முதலாம் இராசராச சோழன்

201
சதய நாள்விழா உதியர் மண்டலந்
தன்னில் வைத்தவன் றனியொர்
மாவின்மேல்
உதய பானுவொத் துதகை

வென்றகோன் ஒருகை வாரணம்
பலக வர்ந்ததும். 24

முதலாம் இராசேந்திர சோழன்

202
களிறு கங்கைநீ ருண்ண
மண்ணையிற் காய்சி னத்தொடே
கலவு செம்பியன்
குளிறு தெண்டிரைக் குரைக டாரமுங்
கொண்டு மண்டலங் குடையுள்
வைத்ததும். 25

முதலாம் இராசாதிராசன்
203
கம்பி லிச்சயத் தம்பம் நட்டதுங் கடிய
ரண்கொள்கல் யாணர் கட்டறக்
கிம்பு ரிப்பணைக் கிரியு கைத்தவன்

கிரிக ளெட்டினும் புலிபொ றித்ததும்.
26

இராசேந்திர சோழன்
204
ஒருக ளிற்றின்மேல் வருக
ளிற்றையொத் துலகு யக்கொளப்
பொருது கொப்பையிற்
பொருக ளத்திலே முடிக வித்தவன்
புவிக விப்பதோர் குடைக வித்ததும்.
27

இராச மகேந்திரன்
205
பனுவலுக்கு முதலாய வேத நான்கிற்
பண்டுரைத்த நெறிபுதுக்கிப் பழையர் தங்கள்
மனுவினுக்கு மும்மடிநான் மடியாஞ்

சோழன்
மதிக்குடைக்கீ ழறந்தளிர்ப்ப வளர்ந்த
வாறும். 28

முதற் குலோத்துங்கன் தோற்றம்

206
குந்தளரைக் கூடற்சங் கமத்து வென்ற
கோனபயன் குவலயங்காத் தளித்த
பின்னை
இந்தநிலக் குலப்பாவை யிவன்பாற்
சேர என்ன தவஞ் செய்திருந்தா
ளென்னத் தோன்றி. 29

வெற்றிச் சிறப்பு

207
எவ்வளவு திரிபுவன முளவாய்த்

தோன்றும் எவ்வளவு குலமறைக
ளுளவாய் நிற்கும்
அவ்வளவு திகிரிவரை யளவுஞ்
செங்கோல் ஆணைசெல்ல
வபயன்காத் தளிக்கு மாறும். 30

கரிகாலன் எழுதி முடித்தான்

208
இப்பு றத்திமய மால்வரையின் மார்பி
னகலத்
தெழுதி னானெழுது தற்கரிய வேத
மெழுதி
ஒப்பு றத்தனது தொன்மரபு மம்ம
ரபின்மேல்
உரைசெய் பல்புகழு மொன்றுமொழி
யாத பரிசே. 31

காளி வியத்தல்

209

எழுதி மற்றுரைசெய் தவரவர்கள்
செய்பி ழையெலாம்
எமர்பொ றுக்கவென விப்படிமு டித்த
விதனைத்
தொழுது கற்றனமெ னத்தொழுது
சொல்லு மளவிற்
சோழ வம்சமிது சொன்னவறி
வென்னவழகோ. 32

காளி மகிழ்தல்

210

வையகமாங் குலமடந்தை
மன்னபயன் தன்னுடைய மரபு
கேட்டே
ஐயனையான் பெற்றெடுத்த

வப்பொழுதும் இப்பொழுதொத்
திருந்த தில்லை. 33

காளி புகழ்தல்
211
உலகையெலாங் கவிக்கின்ற
ஒருகவிகைச் சயதுங்கன் மரபு கீர்த்தி
அலகையெலாங் காக்கின்ற
அம்மைபூ தலங்காப்பா னவனே
யென்ன. 34

---

## 9. பேய் முறைப்பாடு

பேய்களாகப் பிறந்து கெட்டோம்

212
ஆறுடைய திருமுடியா னருளுடைய

பெருந்தேவி யபயன் காக்கும்
பேறுடைய பூதமாப் பிறவாமற்
பேய்களாப் பிறந்து கெட்டேம். 1

எங்களை யார் காப்பார்

213
ஆர்காப்பா ரெங்களைநீ யறிந்தருளிக்
காப்பதல்லா லடையப் பாழாம்
ஊர்காக்க மதில்வேண்டா வுயிர்காத்த
உடம்பினைவிட் டோடிப் போதும். 2

பிழைக்க மாட்டோம்

214
ஒய்கின்றே மோய்வுக்கு
மினியாற்றேம் ஒருநாளைக்
கொருநாள் நாங்கள்

தேய்கின்ற படிதேய்ந்து
மிடுக்கற்றேஞ் செற்றாலு முய்ய
மாட்டேம். 3

ஆசை போதும்

215
வேகைக்கு விறகானே மெலியா
நின்றே மெலிந்தவுடல் தடிப்பதற்கு
விரகுங் காணேஞ்
சாகைக்கித் தனையாசை போதும்
பாழிற் சாக்காடு மரிதாகத் தந்து
வைத்தாய். 4

பசிக்கு ஒன்றும் இல்லேம்

216
சாவத்தாற் பெறுதுமோ

சதுமுகன்றான் கீழ்நாங்கண் மேனாட்
செய்த
பாவத்தா லெம்வயிற்றிற்
பசியைவைத்தான் பாவியேம்
பசிக்கொன் றில்லேம். 5

மூளி வாய் ஆனோம்

217
பதடிகளாய்க் காற்றடிப்ப நிலைநி
லாமற் பறக்கின்றேம் பசிக்கலைந்து
பாதி நாக்கும்
உதடுகளிற் பாதியுந்தின் றொறுவா
யானேம் உனக்கடிமை யடியேமை
யோடப் பாராய். 6

நெற்றாகி யுள்ளோம்
218

அகளங்க னமக்கிரங்கா னரசரிடுந்
திறைக்கருள்வா னவன்றன் யானை
நிகளம்பூண் டனவடியேம்
நெடும்பசியான் அறவுலர்ந்து நெற்றா
யற்றேம். 7

நற்குறியால் பொறுத்துள்ளோம்
219
மூக்கருகே வழுநாறி முடைநாறி
உதடுகளுந் துடிப்ப வாயை
ஈக்கதுவுங் குறியாலுய்ந்
திருக்கின்றேம் அன்றாகி லின்றே
சாதும். 8

முதுபேய் வருகை

220
என்றுபல கூளிகளி ரைத்துரைசெய்

போதத்
தன்றிமய வெற்பினிடை நின்றுவரு
மப்பேய். 9

முதுபேய் வணங்கிக் கூறல்

221
கைதொழுதி றைஞ்சியடி யேன்வடக
லிங்கத்
தெய்தியவி டத்துளநி மித்தமிவை
கேண்மோ. 10

தீய சகுனங்கள்

222
மதக்கரி மருப்பிற மதம்புலரு மாலோ
மடப்பிடி மருப்பெழ மதம்பொழியு
மாலோ

கதிர்ச்சுடர் விளக்கொளி கறுத்தெரியு
மாலோ
காலமுகில் செங்குருதி காலவரு
மாலோ. 11

223
வார்முரசி ருந்துவறி தேயதிரு
மாலோ
வந்திரவி லிந்திரவில் வானிலிடு
மாலோ
ஊர்மனையி லூமனெழ ஓரியமு
மாலோ
ஓமஎரி ஈமஎரி போல்கமழு மாலோ.
12

224
பூவிரியு மாலைகள் புலால்கமழு
மாலோ

பொன்செய்மணி மாலையொளி
போயொழியு மாலோ
ஒவிய மெலாமுடல் வியர்ப்பவரு
மாலோ
ஊறுபுனல் செங்குருதி நாறவரு
மாலோ. 13

விளைவு என்ன ஆகும்

225
எனாவுரைமு டித்ததனை
யென்கொல்விளை வென்றே
வினாவுரை தனக்கெதிர் விளம்பின
ணங்கே. 14

இரு குறிகள் நல்லன

226

உங்கள் குறியும் வடகலிங்கத் துள்ள
குறியு முமக்கழகே
நங்கள் கணிதப் பேய்கூறு நனவுங்
கனவுஞ் சொல்லுவாம். 15

பரணிப் போர் உண்டு

227
நிருபரணி வென்றவக ளங்கன்மத
யானைநிக ளங்களொடு நிற்பன
வதற்
கொருபரணி உண்டென வுரைத்தன
வுரைப்படி யுமக்கிது கிடைக்கு
மெனவே. 16

களிப்பால் நடித்தன

228

தடித்தன மெனத்தலை தடித்தன
மெனப்பல தனிப்பனை குனிப்ப
வெனவே
நடித்தன நடிப்பவலி யற்றன
கொடிற்றையு நனைத்தன உதட்டி
னுடனே. 17

பசியை மறந்தன

229

விலக்குக விலக்குக விளைத்தன
வெனக்களி விளைத்தன விளைத்தன
விலா
அலக்குக வலக்குக வடிக்கடி சிரித்தன
வயர்த்தன பசித்த பசியே. 18

வயிறு நிரம்பப் போதுமா

230
ஆடியிரைத் தெழுகணங்க
ளணங்கேயிக் கலிங்கக்கூழ்
கூடியிரைத் துண்டொழியெங்
கூடாரப் போதுமோ. 19

ஒட்டிக்கு இரட்டி

231
போதும்போ தாதெனவே
புடைப்படல மிடவேண்டா
ஓதஞ்சூ ழிலங்கைப்போர்க்
கொட்டிரட்டி கலிங்கப் போர். 20

---

## **10.** அவதாரம்

திருமாலே தோன்றினான்

232
அன்றிலங்கை பொருதழித்த
வவனேயப் பாரதப்போர் முடித்துப்
பின்னை
வென்றிலங்கு கதிராழி விசயதரன்
எனவுதித்தான் விளம்பக் கேண்மின்.
1

233
தேவரெலாங் குறையிரப்பத்
தேவகிதன் திருவயிற்றில் வசுதே
வற்கு
மூவுலகுந் தொழநெடுமால்
முன்னொருநாள் அவதாரஞ் செய்த
பின்னை. 2

கண்ணனே குலோத்துங்கனானான்
234
இருள்முழுது மகற்றும்விது
குலத்தோன் தேவி இகல்விளங்கு
தபனகுலத் திராச ராசன்
அருள்திருவின் திருவயிற்றில் வந்து
தோன்றி ஆலிலையில் அவதரித்தா
னவனே மீள. 3

துந்துமி முழங்கிற்று

235
வந்தருளி யவதாரஞ் செய்தலுமே
மண்ணுலகும் மறைகள் நான்கும்
அந்தரநீங் கினவென்ன வந்தரதுந்
துமிமுழங்கி யெழுந்த தாங்கே. 4

மலர்க்கையால் எடுத்தாள்

236
அலர்மழைபோல் மழைபொழிய
வதுகண்டு கங்கைகொண்ட சோழன்
தேவி
குலமகள்தன் குலமகனைக் கோகனத
மலர்க்கையா னெடுத்துக் கொண்டே.
5

பாட்டியார் கருத்து

237
அவனிபர்க்குப் புரந்தரனா
மடையாளம் அவயவத்தி னடைவே
நோக்கி
இவனெமக்கு மகனாகி யிரவிகுலம்
பாரிக்கத் தகுவ னென்றே. 6

இருகுலத்து அரசரும் மகிழ்ந்தனர்

238
திங்களினி ளங்குழவி செம்மலிவ
னென்றுஞ்
செய்யபரி திக்குழவி யையனிவ
னென்றுந்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர்
தாமுந்
தனித்தனி யுவப்பதொர் தவப்பயனு
மொத்தே. 7

நடை கற்றான்

239
சினப்புலி வளர்ப்பதொர் சிறுப்புலியு
மொத்தே
திசைக்களி றணைப்பதொர்

தனிக்களிறு மொத்தே
அனைத்தறமு மொக்கவடி
வைக்கவடி வைத்தே
அறத்தொடு மறத்துறை நடக்கநடை
கற்றே. 8

ஐம்படைத் தாலி அணிந்தனன்

240
பண்டுவசு தேவன்மக னாகிநில
மாதின்
படர்களையு மாயனிவ னென்றுதெளி
வெய்தத்
தண்டுதனு வாள்பணில நேமியெனு
நாமத்
தன்படைக ளானதிரு வைம்படை
தரித்தே. 9

மழலை மொழிந்தான்

241
தாயர்தரு பால்முலை சுரக்கவரு நாளே
தானுமுல கத்தவர்த மக்கருள்சு ரந்தே
தூயமனு வுஞ்சுருதி யும்பொருள்வி ளங்கிச்
சொற்கள்தெரி யத்தனது சொற்கள்தெரி வித்தே. 10

பூணூல் அணிந்தான்

242
திருமார்பின் மலர்மடந்தை
திருக்கழுத்தின் மங்கலநா ணென்ன
முந்நூற்

பெருமார்பின் வந்தொளிரப்
பிறப்பிரண்டா வதுபிறந்து சிறந்த
பின்னர். 11

மறை கற்றான்

243
போதங்கொள் மாணுருவாய்ப்
புவியிரந்த அஞ்ஞான்று புகன்று
சென்ற
வேதங்கள் நான்கினையும்
வேதியர்பால் கேட்டருளி மீண்டு
கற்றே. 12

வீர வாள் ஏந்தினான்

244
நிறைவாழ்வைப் பெறல்நமக்கும்

அணித்தென்று நிலப்பாவை களிப்ப
விந்தத்
துறைவாளைப் புயத்திருத்தி
யுடைவாளைத் திருவரையி னொளிர
வைத்தே. 13

யானையேற்றம் கற்றான்

245
ஈரிரும ருப்புடைய வாரணமு
கைத்தே இந்திரனெ திர்ந்தவரை
வென்றுவரு மேயான்
ஓரிரும ருப்புடைய வாரணமு
கைத்தே ஒன்னலரை வெல்வனென
வன்னதுப யின்றே. 14

குதிரையேற்றம் பயின்றான்

246

இற்றைவரை யுஞ்செலவ
ருக்கனொரு நாள்போல் ஏழ்பரியு
கைத்திருள கற்றிவரு மேயான்
ஒற்றைவய மானடவி யித்தரைவ
ளாகத் துற்றவிருள் தீர்ப்பனென
மற்றதுப யின்றே. 15

படைக்கலம் பயின்றான்

247

சக்கரமு தற்படையொ ரைந்துமுதல்
நாளே தன்னுடைய வானவத
னாலவைந மக்குத்
திக்குவிச யத்தின்வரு மென்றவைப
யிற்றிச் செங்கைமலர் நொந்திலசு
மந்திலத னக்கே. 16

பல்கலை தேர்ந்தான்

248
உரைசெய்பல கல்விகளி னுரிமைபல
சொல்லுவதெ னுவமையுரை செய்யி
னுலகத்
தரசருள ரல்லரென அவைபுகழ
மல்குகலை யவையவைகள் வல்ல
பிறகே. 17

இளவரசன் ஆனான்
249
இசையுடனெ டுத்தகொடி யபயனவ
னிக்கிவனை யிளவரசில் வைத்த
பிறகே
திசையரச ருக்குரிய திருவினைமு
கப்பதொரு திருவுளம டுத்த ருளியே.
18

போர்மேல் சென்றான்

250
வளர்வதொர்ப தத்தினிடை மதகரிமு
கத்தினிடை
வளையுகிர்ம டுத்து விளையா
டிளவரியெ னப்பகைஞ
ரெதிர்முனைக
ளைக்கிழிய எறிபடைபி டித்த
ருளியே. 19

வடவரசரை வென்றான்

251
குடதிசை புகக்கடவு குரகதர
தத்திரவி குறுகலு மெறிக்கு
மிருள்போல்

வடதிசை முகத்தரசர் வருகத
முகத்தனது குரகத முகைத் தருளியே.
20

வயிராகரத்தை எறித்தான்

252
புரமெரி மடுத்தபொழு ததுவிது
வெனத்திகிரி புகையெரி குவிப்ப
வயிரா
கரமெரி மடுத்தரசர் கரமெதிர்
குவிப்பதொரு கடவரை தனைக்
கடவியே. 21

களம் கொண்டான்

253
குளமுதிர மெத்தியதொர் குரைகடல்

கடுப்பவெதிர் குறுகலர்கள் விட்ட
குதிரைத்
தளமுதிர வெட்டியொரு செருமுதிர
ஒட்டினர்கள் தலைமலை குவித்
தருளியே. 22

சக்கரக்கோட்டம் அழித்தான்

254
மனுக்கோட்ட மழித்தபிரான்
வளவர்பிரான் திருப்புருவத்
தனுக்கோட்ட நமன்கோட்டம்
பட்டதுசக் கரக்கோட்டம். 23

சீதனம் பெற்றான்
255
சரிக ளந்தொறுந் தங்கள் சயமகள்
தன்னை மன்னப யன்கைப்

பிடித்தலும்
பரிக ளுங்களி றுந்தன ராசியும் பாரி
போகங் கொடுத்தனர் பார்த்திபர். 24

கைவேல் சிவந்தது
256
பொருத ராதிபர் கண்கள் சிவந்தில
போரி லோடிய கால்கள் சிவந்தன
விருத ராசப யங்கரன் செங்கையில்
வேல்சி வந்தது கீர்த்தி வெளுத்ததே.
25

வீரராசேந்திரன் இறந்தான்

257
மாவுகைத் தொருதனி யபய னிப்படி
வடதிசை மேற்செல மன்னர் மன்னவன்

தேவருக் கரசனாய் விசும்பின்
மேற்செலத் தென்றிசைக் குப்புகுந்
தன்மை செப்புவாம். 26

சோழ நாட்டில் நிகழ்ந்தவை

258
மறையவர் வேள்வி குன்றி மனுநெறி
யனைத்து மாறித்
துறைகளோ ராறு மாறிச் சுருதியு
முழக்கம் ஓய்ந்தே. 27

259
சாதிக ளொன்றொ டொன்று தலைதடு
மாறி யாரும்
ஓதிய நெறியின் நில்லா
தொழுக்கமும் மறந்த போயே. 28

260

ஒருவரை யொருவர் கைம்மிக்
கும்பர்தங் கோயில் சோம்பி
அரிவையர் கற்பின் மாறி யரண்களு
மழிய வாங்கே. 29

சோழநாடு அடைந்தான்

261

கலியிருள் பரந்த காலைக் கலியிருள்
கரக்கத் தோன்றும்
ஒலிகட லருக்க னென்ன உலகுய்ய
வந்து தோன்றி. 30

நீதியை நிலைநிறுத்தினான்

262

காப்பெலா முடைய தானே

படைப்பதுங் கடனாக் கொண்டு
கோப்பெலாங் குலைந்தோர் தம்மைக்
குறியிலே நிறுத்தி வைத்தே. 31

திரு முழுக்கு

263
விரிபுனல் வேலை நான்கும் வேதங்க
ணான்கு மார்ப்பத்
திரிபுவ னங்கள் வாழ்த்தத் திருவபி
டேகஞ் செய்தே. 32

முடி புனைதல்

264
அறைகழ லரச ரப்பொழு தடிமிசை
யறுகெ டுத்திட
மறையவர் முடியெ டுத்தனர்

மனுநெறி தலையெ டுக்கவே. 33

அறம் முளைத்தன

265
நிரைமணி பலகு யிற்றிய நெடுமுடி
மிசைவி திப்படி
சொரிபுன லிடைமு ளைத்தன
துறைகளி னறம னைத்துமே. 34

புலிக்கொடி எடுத்தான்

266
பொதுவற வுலகு கைக்கொடு
புலிவளர் கொடியெ டுத்தலும்
அதுமுதற் கொடியெ டுத்தன
அமரர்கள் முழவெ டுக்கவே. 35

நிலவு எறித்தது இருள் ஒளித்தது

267
குவிகைகொ டரசர் சுற்றிய குரைகழ
லபயன் முத்தணி
கவிகையி னிலவெ றித்தது கலியெனு
மிருளொ ளித்ததே. 36

குடை நிழலின் செயல்

268
அரனுறை யும்படி மலைகள் அடைய
விளங்கின வனையோன்
ஒருதனி வெண்குடை யுலகில்
ஒளிகொள் நலந்தரு நிழலில். 37

புகழ் மேம்பாடு

269

அரிதுயி லும்படி கடல்கள் அடைய
விளங்கின கவினின்
ஒருகரு வெங்கலி கழுவி உலவு
பெரும்புகழ் நிழலில். 38

270

நிழலில டைந்தன திசைகள் நெறியில
டைந்தன மறைகள்
கழலில டைந்தனர் உதியர் கடலில
டைந்தனர் செழியர். 39

271

கருணையொ டுந்தன துபய கரமுத
வும்பொருள் மழையின்
அரணிய மந்திர அனல்கள்
அவையுத வும்பெரு மழையே. 40

272
பரிசில் சுமந்தன கவிகள் பகடு
சுமந்தன திறைகள்
அரசு சுமந்தன இறைகள் அவனி
சுமந்தன புயமும். 41

273
விரித்த வாளுகிர் விழித் தழற்புலியை
மீது வைக்கவிம யத்தினைத்
திரித்த கோலில்வளை வுண்டு நீதிபுரி
செய்ய கோலில்வளை வில்லையே.
42

274
கதங்க ளிற்பொரு திறைஞ்சிடா
வரசர் கால்க ளிற்றளையும்
நூல்களின்

பதங்க ளிற்றளையு மன்றி வேறொரு
பதங்க ளிற்றளைக ளில்லையே. 43

275
மென்க லாபமட வார்கள் சீறடி
மிசைச்சி லம்பொலிவி ளைப்பதோர்
இன்க லாம்விளைவ தன்றி
யெங்குமொர் இகல்க லாம்விளைவ
தில்லையே. 44

பொழுது போக்கு

276
வருசெருவொன் றின்மையினால்
மற்போருஞ் சொற்புலவோர் வாதப்
போரும்
இருசிறைவா ரணப்போரு
மிகன்மதவா ரணப்போரு மினைய

கண்டே. **45**

277

கலையினொடுங் கலைவாணர்
கவியினொடும் இசையினொடுங்
காதன் மாதர்
முலையினொடு மனுநீதி
முறையினொடு மறையினொடும்
பொழுது போக்கி. **46**

பரிவேட்டையாட நினைத்தான்

278

காலாற்றண் டலையுழக்குங்
காவிரியின் கரைமருங்கு வேட்டை
யாடிப்
பாலாற்றங் கரைமருங்கு
பரிவேட்டை ஆடுதற்குப் பயண

மென்றே. 47

படை திரண்டது

279
முரசறைகென் றருளுநதலு
முழுதுலகும் ஒருநகருட் புகுந்த
தொப்பத்
திரைசெய்கட லொலியடங்கத்
திசைநான்கிற் படைநான்குந் திரண்ட
வாங்கே. 48

வேட்டைக்குப் புறப்பட்டான்

280
அழகின்மே லழகுபெற
வணியனைத்தும் அணிந்தருளிக்
கணித நூலிற்

பழகினார் தெரிந்துரைத்த
பழுதறுநாட் பழுதற்ற பொழுதத்
தாங்கே. 49

தானம் அளித்தான்

281
அனக தானதரு மங்கண்மறை
மன்னர் பெறவே
அபய தானமப யம்புகுது மன்னர்
பெறவே
கனக தானமுறை நின்றுகவி வாணர்
பெறவே
கரட தானமத வாரணமு மன்று
பெறவே. 50

யானைமேல் ஏறினான்

282
மற்ற வெங்கட களிற்றினுத யக்கி
ரியின்மேல்
மதிக வித்திட வுதித்திடு மருக்க
னெனவே
கொற்ற வெண்குடை கவிப்பமிசை
கொண்டு கவரிக்
குலம திப்புடை கவித்தநில வொத்து
வரவே. 51

பல்லியம் முழங்கின

283
ஒருவ லம்புரி தழங்கொலி முழங்கி
யெழவே
உடன் முழங்குபணி லம்பல முழங்கி
யெழவே
பருவம் வந்துபல கொண்டல்கண்

முழங்கி யெழவே
பலவி தங்களொடு பல்லிய முழங்கி
எழவே. 52

வேறு பல ஒலிகள் எழுந்தன

284
மன்னர் சீர்சய மிகுத்திடை விடாத
வொலியும்
மறைவ லாளர்மறை நாள்வயின்
வழாத வொலியும்
இன்ன மாகடல் முழங்கியெழு கின்ற
வொலியென்
றிம்ப ரும்பரறி யாதபரி செங்கு
மிகவே. 53

ஏழிசைவல்லபியும் உடனிருந்தாள்

285
வாழி சோழகுல சேகரன் வகுத்த
இசையின்
மதுர வாரியென லாகுமிசை மாத
ரிதெனா
ஏழு பாருலகொ டேழிசை வளர்க்க
உரியாள்
யானை மீதுபிரி யாதுட னிருந்து
வரவே. 54

தியாகவல்லியும் சென்றாள்

286
பொன்னின் மாலைமலர் மாலைபணி
மாறி யுடனே
புவனி காவலர்கள் தேவியர்கள்
சூழ்பிடி வரச்
சென்னி யாணையுடன் ஆணையை

நடத்து முரிமைத்
தியாக வல்லிநிறை செல்வியுடன்
மல்கி வரவே. 55

மகளிரும் மன்னரும் சூழ வருதல்

287
பிடியின் மேல்வரு பிடிக்குல மநேக
மெனவே
பெய்வ ளைக்கைமட மாதர்பிடிமீதின்
வரவே
முடியின் மேன்முடி நிரைத்துவரு
கின்ற தெனவே
முறைசெய் மன்னவர்கள்
பொற்குடை கவித்து வரவே. 56

அரசரோடு வீரர் சூழ்ந்து வரல்

288

யானை மீதுவரும் யானையு மநேக
மெனவே
அடுக ளிற்றின்மிசை கொண்டர
சநேகம் வரவே
சேனை மீதுமொரு சேனைவரு கின்ற
தெனவே
திௗப டைக்கலன் நிலாவொளி
படைத்து வரவே. 57

முரசொலியும் கொடிநிரலும்

289

முகிலின் மேன்முகின் முழங்கிவரு
கின்ற தெனவே
மூரி யானைகளின் மேன்முரச திர்ந்து
வரவே
துகிலின் மேல்வரு துகிற்குலமு

மொக்கு மெனவே
தோகை நீள்கொடிகள் மேன்முகில்
தொடங்கி வரவே. 58

புழுதி எழுந்தது

290
தேரின் மீதுவரு தேர்களு மநேக
மெனவே
செம்பொன் மேகலை நிதம்பநிரை
தேரின் வரவே
பாரின் மீதுமொரு பாருளது போலு
மெனவே
படல தூளியு மெழுந்திடையின் மூடி
வரவே. 59

படை செல்லும் காட்சி

291
யானை மேலிளம் பிடியின்
மேனிரைத்
திடைய றாதுபோ மெறிக டற்கிணை
சேனை மாகடற் கபய னிம்முறைச்
சேது பந்தனஞ் செய்த தொக்கவே.
60

பல்லக்கும் முத்துக் குடையும்

292
நீல மாமணிச் சிவிகை வெள்ளமும்
நித்தி லக்குலக் கவிகை வெள்ளமுங்
காலி னான்வரும் யமுனை
வெள்ளமுங் கங்கை வெள்ளமுங்
காண்மி னென்னவே. 61

புலிக்கொடிச் சிறப்பு

293
கெண்டை மாசுண முவணம்
வாரணங் கேழ லாளிமா மேழி
கோழிவிற்
கொண்ட வாயிரங் கொடிநு டங்கவே
குமுறு வெம்புலிக் கொடிகு லாவவே.
62

மகளிர் கூட்டம்

294
தொடைகள் கந்தரம் புடைகொள்
கொங்கைகண்
சோதி வாண்முகங் கோதை
யோதிமென்
நடைகண் மென்சொலென் றடைய
வொப்பிலா

நகை மணிக்கொடித் தொகைப
ரக்கவே. 63

மகளிர் தோற்றம்

295
எங்குமுள மென்கதலி யெங்குமுள
தண்கமுக மெங்குமுள பொங்கு
மிளநீர்
எங்குமுள பைங்குமிழ்க ளெங்குமுள
செங்குமுத மெங்குமுள செங்க
யல்களே. 64

296
ஆறலைத ரங்கமுள வன்னநடை
தாமுமுள
வாலைகமழ் பாகு முளவாய்
வேறுமொரு பொன்னிவள நாடுசய

துங்கன்முன்வி தித்ததுவு மொக்கு
மெனவே. 65

மலைக் காட்சி

297
வேழம்நிரை வென்றுமலை
யெங்குமிடை
கின்றவயில் வென்றியப யன்ற
னருளால்
வாழவப யம்புகுது சேரனொடு
கூடமலை நாடடைய வந்த தெனவே.
66

298
அக்கிரிகு லங்கள்விடு மங்குலியின்
நுண்திவலை யச்செழிய ரஞ்சி
விடுமத்

திக்கிலுள நித்திலமு கந்துகொடு
வீசியொரு தென்றல்வரு கின்ற
தெனவே. 67

தில்லைக் கூத்தனை வணங்கினான்

299
தென்றிசையி னின்றுவட
திக்கின்முகம்
வைத்தருளி முக்கணுடை வெள்ளி
மலையோன்
மன்றினட மாடியருள்
கொண்டுவிடை
கொண்டதிகை மாநகருள் விட்ட
ருளியே. 68

காஞ்சியை அடைந்தான்
300

விட்டவதி கைப்பதியி னின்றுபய
ணம்பயணம் விட்டுவிளை யாடி
யபயன்
வட்டமதி யொத்தகுடை
மன்னர்தொழ
நண்ணினன்வ ளங்கெழுவு கச்சி
நகரே. 69

கலிங்கப்பேய் ஓடிவந்தது

301

என்னுமித னன்மொழியெ
டுத்திறைவி சொல்லுவதன்
முன்னமிகல் கண்ட தொருபேய்
தன்னுடைய கால்தனது பிற்பட
மனத்துவகை தள்ளிவர வோடி
வரவே. 70

302
கலிங்கர் குருதி குருதி கலிங்க
மடைய வடைய
மெலிந்த வுடல்கள் தடிமின் மெலிந்த
வுடல்கள் தடிமின். 71

303
உணங்கள் வயிறு குளிர உவந்து
பருக பருக
கணங்க ளெழுக வெழுக கணங்க
ளெழுக வெழுக. 72

304
என்செயப் பாவி காளிங் கிருப்பதங்
கிருப்ப முன்னே
வன்சிறைக் கழுகும் பாறும் வயிறுகள்

பீறிப் போன. 73

305
வயிறுக ளென்னிற் போதா
வாய்களோ போதா பண்டை
எயிறுக ளென்னிற் போதா என்னினு
மீண்டப் போதும். 74

306
சிரமலை விழுங்கச் செந்நீர்த்
திரைகடல் பருக லாகப்
பிரமனை வேண்டிப் பின்னும்
பெரும்பசி பெறவும் வேண்டும். 75

பேய்களின் பேரின்பம்

307

என்ற வோசை தஞ்செ விக் கிசைத்த
ஓலுந்த சைப்பிணந்
தின்ற போற்ப ருத்து மெய் சிரித்து
மேல்வி ழுந்துமே. 76

308
ஒகை சொன்ன பேயின் வாயை ஓடி
முத்த முண்ணுமே
சாகை சொன்ன பேய் களைத் தகர்க்க
பற்க ளென்னுமே. 77

309
பிள்ளை வீழ வீழ வும்பெ ருந்
துணங்கை கொட்டுமே
வள்ளை பாடி யாடி யோடி
வாவெனாவ ழைக்குமே. 78

310

எனாவு ரைத்த தேவி வாழி வாழி
யென்று வாழ்த்தியே
கனாவு ரைத்த பேயி னைக்க ழுத்தி
னிற்கொ டாடுமே. 79

காளி போர்நிலை கேட்டல்

311
ஆடிவரு பேய்களின லந்தலைத
விர்த்தடுப றந்தலைய றிந்த தனினின்
றோடிவரு பேயையிக லுள்ளபடி
சொல்கெனவு ரைத்தனளு ரைத்த
ருளவே. 80

---

## 11.காளிக்குக் கூளி கூறியது

நாவாயிரம் நாளாயிரம்

312

மாவா யிரமும் படக்கலிங்கர் மடிந்த
களப்போ ருரைப்போர்க்கு
நாவா யிரமுங் கேட்போர்க்கு நாளா
யிரமும் வேண்டுமால். 1

சிறியேன் விண்ணப்பம்

313

ஒருவர்க் கொருவாய் கொண்டு
ரைக்க ஒண்ணா தேனு முண்டாகுஞ்
செருவைச் சிறியேன் விண்ணப்பஞ்
செய்யச் சிறிது கேட்டருளே. 2

காஞ்சனம் பொழிகாஞ்சி

314

பாரெ லாமுடை யானப
யன்கொடைப் பங்க யக்கர
மொப்பெனப் பண்டொர்நாள்
காரெ லாமெழுந் தேழரை நாழிகைக்
காஞ்ச னம்பொழி காஞ்சிய
தன்கணே. 3

சித்திர மண்டபத்தில்

315
அம்பொன் மேருவ துகொலி
துகொலென் றாயி ரங்கதிர் வெய்யவ
னையுறுஞ்
செம்பொன் மாளிகைத் தென்குட
திக்கினிற் செய்த சித்திர மண்டபந்
தன்னிலே. 4

நித்திலப் பந்தரின்கீழ்

316
மொய்த்தி லங்கிய தாரகை
வானின்நீள் முகட் டெழுந்த
முழுமதிக் கொப்பென
நெய்த்தி லங்கிய நித்திலப் பந்தரின்
நின்று வெண்குடை யொன்று
நிழற்றவே. 5

குடையும் சாமரையும்
317
மேற்க வித்த மதிக்குடை யின்புடை
வீசு கின்றவெண் சாமரை தன்றிருப்
பாற்க டற்றிரை யோரிரண் டாங்கிரு
பாலும் வந்து பணிசெய்வ போலுமே.
6

சிங்க ஏறு

318
அங்கண் ஞால மனைத்தும்
புயத்தில்வைத் தாட கக்கிரி யிற்புலி
வைத்தவன்
சிங்க ஆசனத் தேறி யிருப்பதோர்
சிங்க வேறெனச் செவ்வி சிறக்கவே.
7

இருந்த மாட்சி

319
பணிப் பணத்துறை பார்க்கொரு
நாயகன் பல்க லைத்துறை நாவிலி
ருந்தவன்
மணிப்ப ணிப்புயத் தேசிங்க வாகனி
வந்து செந்திரு மாதொடி ருக்கவே. 8

தேவியர் சேவித்திருந்தனர்

320

தரும டங்கமு கந்துத னம்பொழி
தன்பு யம்பிரி யாச்சயப் பாவையுந்
திரும டந்தையும் போற்பெரும்
புண்ணியஞ் செய்த தேவியர் சேவித்
திருக்கவே. 9

ஏவற் பெண்டிர்

321

நாட காதிநி ருத்தம னைத்தினு நால்வ
கைப்பெரும் பண்ணினு மெண்ணிய
ஆடல் பாடல ரம்பைய ரொக்குமவ்
வணுக்கி மாரும நேகரி ருக்கவே. 10

புகழ் பாடுவோம்

322
சூதர் மாகத ராதிய மாந்தருந் துய்ய
மங்கலப் பாடகர் தாமுநின்
பாத மாதர ராயவர் கட்கெலாம்
பைம்பொன் மௌலியெ னப்புகழ்
பாடவே. 11

இசை வல்லார் போற்றினர்

323
வீணை யாழ்குழல் தண்ணுமை
வல்லவர் வேறு வேறிவை நூறுவி
தம்படக்
காண லாம்வகை கண்டனம் நீயினிக்
காண்டல் வேண்டுமெ னக்கழல்
போற்றவே. 12

கல்வியில் பிழை

324

தாள முஞ்செல வும்பிழை யாவகை
தான் வகுத்தன தன்னெதிர் பாடியே
காள முங்களி றும்பெறும் பாணர்தங்
கல்வி யிற்பிழை கண்டனன்
கேட்கவே. 13

மன்னவர் பணிமாறினர்

325

வெங்க ளிற்றிலி ழிந்தபின் வந்தடி
வீழ்ந்த மன்னவர் வெந்நிடு முன்னிடு
தங்கள் பொற்குடை சாமர
மென்றிவை தாங்கள் தங்கரத்
தாற்பணி மாறவே. 14

மன்னர் மனைவியர் சேடியர்

326
தென்ன ராதிந ராதிப ரானவர் தேவி
மார்கள்தன் சேடிய ராகவே
மன்ன ராதிபன் வானவ ராதிபன்
வந்தி ருந்தன னென்னவி ருக்கவே.
15

அமைச்சர் முதலியோர்

327
மண்ட லீகரு மாநில வேந்தரும் வந்து
ணங்குக டைத்தலை வண்டைமன்
தொண்டை மான்முதல் மந்திரப்
பாரகர் சூழ்ந்து தன்கழல் சூடியி
ருக்கவே. 16

கப்பம் செலுத்தச் சென்றனர்

328

முறையி டத்திரு மந்திர ஓலையாண்
முன்வ ணங்கிமு ழுவதும் வேந்தர்தந்
திறையி டப்புற நின்றன ரென்றலுஞ்
செய்கை நோக்கிவந் தெய்தியி
ருக்கவே. 17

கூடியிருந்த அரசர்கள்

329

தென்னவர் வில்லவர் கூபகர் சாவகர்
சேதிபர் யாதவரே
கன்னடர் பல்லவர் கைதவர் காடவர்
காரிபர் கோசலரே. 18

330

கங்கர் கராளர் கவிந்தர் துமிந்தர்
கடம்பர் துளும்பர்களே

வங்க ரிலாடர் மராடர் விராடர்
மயிந்தர் சயிந்தர்களே. 19

331
சிங்களர் வங்களர் சேகுணர் சேவணர்
செய்யவ ரையணரே
கொங்கணர் கொங்கர் குலிங்கர்
சவுந்தியர் குச்சரர் கச்சியரே. 20

332
வத்தவர் மத்திரர் மாளுவர் மாகதர்
மச்சர்மி லேச்சர்களே
குத்தர் குணத்தர் வடக்கர் துருக்கர்
குருக்கர் வியத்தர்களே. 21

333
எந்நக ரங்களு நாடு மெமக்கருள்
செய்தனை யெம்மையிடச்

சொன்னத னங்கள்கொ ணர்ந்தன
மென்றடி சூடுக ரங்களொடே. 22

திறைப் பொருள்கள்

334
ஆர மிவையிவை பொற்கலம்
ஆனை யிவையிவை ஒட்டகம்
ஆட லயமிவை மற்றிவை ஆதி
முடியொடு பெட்டகம்
ஈர முடையன நித்திலம் ஏறு நவமணி
கட்டிய
ஏக வடமிவை மற்றிவை யாதும்
விலையில் பதக்கமே. 23

335
இவையு மிவையு மணித்திரள்
இனைய விவைகன கக்குவை

இருளும் வெயிலு மெறித்திட இலகு
மணிமக ரக்குழை
உவையு முவையுமி லக்கணம்
உடைய பிடியிவை யுள்பக
டுயர்செய் கொடியிவை மற்றிவை
உரிமை யரிவையர் பட்டமே. 24

336

ஏறி யருளவ டுக்குமிந் நூறு களிறுமி
வற்றெதிர்
ஏனை யரசரொ ருத்தரோர் ஆனை
யிடுவரெ னிற்புவி
மாறி யருளவ வர்க்கிடை யாமு
மிசைவமெ னப்பல
மான வரசர்த னித்தனி வாழ்வு
கருதியு ரைப்பரே. 25

உளர் கொல்

337

அரச ரஞ்சலென வடியி ரண்டுமவர்
முடியின் வைத்தருளி யரசர்மற்
றுரைசெ யுந்திறைக ளொழிய
நின்றவரும் உளர்கொ லென்றருளு
பொழுதிலே. 26

திருமந்திர ஓலையின் மறுமொழி

338

கடகர் தந்திறைகொ டடைய வந்தரசர்
கழல்வ ணங்கினர்க ளிவருடன்
வடக லிங்கர்பதி யவனி ரண்டுவிசை
வருகி லன்றிறைகொ டெனலுமே. 27

முறுவல் கொண்டான்

339
உறுவ தென்கொலென நிலைகு
லைந்தரசர் உயிர் நடுங்கவொளிர்
பவளவாய்
முறுவல் கொண்டபொரு ளறிகி
லஞ்சிறிது முனிவு கொண்டதிலை
வதனமே. 28

குலோத்துங்கனின் கட்டளை

340
எளிய னென்றிடினும் வலிய
குன்றரணம் இடிய நம்படைஞர்
கடிதுசென்
றளிய லம்புமத மலைகள்
கொண்டணைமின் அவனை
யுங்கொணர்மி னெனலுமே. 29

தொண்டைமான் எழுந்தான்

341
இறைமொ ழிந்தளவி லெழுக
லிங்கமவை எறிவ னென்றுகழல்
தொழுதனன்
மறைமொ ழிந்தபடி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ரரசனே. 30

விடை அளித்தான்

342
அடைய வத்திசைப் பகைது
கைப்பனென் றாசை கொண்டடற்
தொண்டைமான்
விடையெ னக்கெனப் புலியு
யர்த்தவன் விடைகொ டுக்கவப்
பொழுதிலே. 31

படைகள் திரண்டன

343
கடல்க லக்கல்கொன் மலையி
டித்தல்கொல் கடுவி டப்பொறிப்
பணபணிப்
பிடரொ டித்தல்கொல் படைநி
னைப்பெனப் பிரள யத்தினிற்
றிரளவே. 32

திசை யானைகள் செவிடுபட்டன

344
வளைக லிப்பவு முரசொ லிப்பவு
மரமி ரட்டவும் வயிரமாத்
தொளையி சைப்பவுந் திசையி
பச்செவித் தொளைய டைத்தலைத்

தொடரவே. 33

## இருள் பரந்தது

345
குடைநி ரைத்தலிற் றழைநெ ருக்கலிற்
கொடிவி ரித்தலிற் குளிர்ச துக்கமொத்
திடைநி ரைத்தலிற் பகல்க ரப்பவுய்த்
திருநி லப்பரப் பிருள்ப ரக்கவே. 34

## ஒளி பிறந்தது

346
அலகில் கட்டழற் கனல்வி ரித்தலால்
அரிய பொற்பணிக் கலனெ
றித்தலால்
இலகு கைப்படை கனல்வி ரித்தலால்
இருள்க ரக்கவே யொளிப ரக்கவே.

35

கண்டவர் வியப்பு

347
அகில வெற்புமின் றானை யானவோ
அடைய மாருதம் புரவி யானவோ
முகில னைத்துமத் தேர்க ளானவோ
மூரி வேலைபோர் வீர ரானவோ. 36

படையின் பரப்பு

348
பார்சி றுத்தலிற் படைபெ ருத்ததோ
படைபெ ருத்தலிற் பார்சி றுத்ததோ
நேர்செ றுத்தவர்க் கரிது நிற்பிடம்
நெடுவி சும்பலா லிடமு மில்லையே.
37

படை பொறுமை இழந்தது

349

எனவெ டுத்துரைத் ததிச யித்துநின்
றினைய மண்ணுளோ ரனைய
விண்ணுளோர்
மனந டுக்குறப் பொறைம றத்தலான்
மாதி ரங்களிற் சாது ரங்கமே. 38

யானைகள் சென்றன

350

கடல்க ளைச்சொரி மலையுள
வெனவிரு கடத டத்திடை பொழிமத
முடையன
கனல்வி ளைப்பன முகிலுள
வெனவிழி கனல்சி னத்தன

கரியொடு பரிகளின்
உடல்பி ளப்பன பிறைசில வுளவென
உயர்ம ருப்பின வுலகுகள் குலைதர
உருமி டிப்பன வடவன லுளவென
ஒலிமு கிற்கட கரிகளு மிடையவே.
39

குதிரைகள் சென்றன

351
முனைக ளொட்டினர் முடியினை
யிடறுவ முடியின் முத்தினை
விளைபுக ழெனநில
முதுகில் வித்துவ நிலமுறு துகளற
முகின்மி திப்பன முகில்விடு
துளியொடு
கனை கடற்றிரை நிரையென
விரைவொடு கடலி டத்தினை

வலமிடம் வருவன
கடலி டத்திறு மிடியென வடியிடு
கவன மிக்கன கதழ்பரி கடுகவே. 40

தேர்கள் சென்றன

352
இருநி லத்திட ருடைபடு முருளன
இருபு டைச்சிற குடையன
முனைபெறின்
எதிர்ப றப்பன விடுநுக மொடுகடி
திவுளி முற்படி னிதுபரி பவமெனும்
ஒருநி னைப்பினை யுடையன
வினையன உயர்செய் மொட்டொடு
மலரென நிறுவிய
ஒழித ரச்செரு வுறுபுன லுமிழ்வன
உலக ளப்பன விரதமு மருவியே. 41

வீரர்கள் சென்றனர்

353
அலகில் வெற்றியு முரிமையு
மிவையென
அவய வத்தினி லெழுதிய வறிகுறி
அவையெ னப்பல வடு நிரை
யுடையவர்
அடிபு றக்கிடி லமரர்த முலகொடிவ்
வுலகு கைப்படு மெனினும
தொழிபவர்
உடல் நமக்கொரு சுமையென
முனிபவர்
உயிரை விற்றுறு புகழ்கொள
வுழல்பவர்
ஒருவ ரொப்பவர் படைஞர்கண்
மிடையவே. 42

வீரர் சிரிப்பொலி

354

விழித்த விழிதனி விழித்த விருதர்கள்
விடைத்து வெடுவெடு சிரித்தவாய்
தெழித்த பொழுதுடல் திமிர்க்க
விமையவர் திகைக்கண் மதகரி
திகைக்கவே. 43

குதிரைகளின் வாய்நுரை

355

உகத்தின் முடிவினி லுகைத்த
கனைகடல் உவட்டி யெனமுகில்
முகட்டின்மேல்
நகைத்த விடுபரி முகக்கண் நுரைசுர
நதிக்கண் நுரையென மிதக்கவே. 44

யானைகளின் பிளிறல் ஒலி

356

கழப்பில் வெிளல்சுளி கதத்தி
லிருகவுள் கலித்த கடமிடி பொறுத்த
போர்க்
குழப்பி வருமுகின் முழக்கி
லலைகடல் குளிக்கு முகில்களு
மிடக்கவே. 45

தேர்ப்படைகளின் ஒலி

357

கடுத்த விசையிருள் கொடுத்த
வுலகொரு கணத்தில் வலம்வரு
கணிப்பில் தேர்
எடுத்த கொடிதிசை யிபத்தின்
மதமிசை இருக்கு மளிகளை
யெழுப்பவே. 46

எழுந்தது சேனை

358
எழுந்தது சேனை யெழலு மிரிந்தது
பாரின் முதுகு
விழுந்தன கானு மலையும்
வெறுந்தரை யான திசைகள். 47

அதிர்ந்தன திசைகள்

359
அதிர்ந்தன நாலு திசைகள் அடங்கின
ஏழு கடல்கள்
பிதிர்ந்தன மேரி மலைகள் பிறந்தது
தூளி படலம். 48

புழுதியால் வறண்டன

360

நிலந்தரு தூளி பருகி நிறைந்தது
வானின் வயிறு
வலந்தரு மேக நிரைகள் வறந்தன
நீர்கள் சுவறி. 49

புழுதி தணிந்தது

361

தயங்கொளி ஓடை வரைகள்
தருங்கடம் தாரை மழையின்
அயங்களின் வாயின் நுரையின்
அடங்கின தூளி அடைய. 50

இரவு தங்கிப் பகலில் சென்றன
362

எழுதா ளியடங் கநடந் துதயத் தேகுந்
திசைகண் டதுமீ ளவிழும்

பொழுதே கலொழிந் துகடற்
படையெப் பொழுதுந் தவிரா
துவழிக் கொளவே. 51

கருணாகரன் சென்றான்
363
தண்ணா ரின்மலர்த் திரள்தோ
ளபயன் தானே வியசே னைதனக்
கடையக்
கண்ணா கியசோ ழன்சக் கரமாம்
கருணா கரன்வா ரணமேற் கொளவே.
52

பல்லவ அரசன் சென்றான்

364
தொண்டை யர்க்கரசு முன்வ
ருஞ்சுரவி துங்க வெள்விடையு

யர்த்தகோன்
வண்டை யர்க்கரசு பல்ல வர்க்கரசு
மால்க ளிற்றின்மிசை கொள்ளவே.
53

அரையனும் சோழனும் சென்றனர்

365
வாசி கொண்டரசர் வார ணங்கவர
வாண கோவரையன் வாண்முகத்
தூசி கொண்டுமுடி கொண்ட
சோழனொரு சூழி வேழமிசை
கொள்ளவே. 54

போர்மேற் செல்லல்

366
மறித்தோடி யெவ்வரசுஞ் சரிய

வென்று
வருமனுக்கைப் பல்லவர்கோன்
வண்டை வேந்தன்
எறித்தோடை யிலங்குநடைக்
களிற்றின் மேற்கொண்
டிரைவேட்ட பெரும்புலிபோ
லிகன்மேற் செல்ல. 55

ஆறு பல கடந்தனர்

367
பாலா றுகுசைத் தலைபொன் முகரிப்
பழவா றுபடர்ந் தெழுகொல்
லியெனும்
நாலா றுமகன் றொருபெண்
ணையெனும் நதியா றுகடந் துநடந்
துடனே. 56

368
வயலா றுபுகுந் துமணிப் புனல்வாய்
மண்ணா றுவளங் கெழுகுன்
றியெனும்
பெயலா றுபரந் துநிறைந் துவரும்
பேரா றுமிழிந் ததுபிற் படவே. 57

369
கோதா வரிநதி மேலா றொடுகுளிர்
பம்பா நதியொடு சந்தப்பேர்
ஓதா வருநதி யொருகோ தமையுடன்
ஒலிநீர் மலிதுறை பிறகாக. 58

சூறையிடல்

370
கடையிற் புடைபெயர் கடலொத்
தமரர் கலங்கும் பரிசு கலிங்கம்புக்

கடையப் படரெரி கொளுவிப்
பதிகளை அழியச் சூறைகொள்
பொழுதத்தே. 59

கலிங்கர் நடுக்கம்

371
கங்கா நதியொரு புறமா கப்படை
கடல்போல் வந்தது கடல்வந்தால்
எங்கே புகலிட மெங்கே யினியரண்
யாரே அதிபதி யிங்கென்றே. 60

372
இடிகின் றனமதி லெரிகின் றனபதி
எழுகின் றனபுகை பொழிலெல்லாம்
மடிகின் றனகுடி கெடுகின் றனமினி
வளைகின் றனபடை பகையென்றே.
61

முறையீடு

373
உலகுக் கொருமுத லபயற் கிடுதிறை
உரைதப் பியதெம தரசேயெம்
பலகற் பனைகளை நினைவுற்
றிலைவரு படைமற் றவன்விடு
படையென்றே. 62

கலிங்கர் நிலை

374
உரையிற் குழறியு முடலிற் பதறியும்
ஒருவர்க் கொருவர்முன்
முறையிட்டே
அரையிற் றுகில்விழ வடையச்
சனபதி அடியிற் புகவிழு

பொழுதத்தே. 63

அனந்தவன்மனின் செயல்

375
அந்தரமொன் றறியாத வடகலிங்கர்
குலவேந்த னனந்த பன்மன்
வெந்தறுகண் வெகுளியினால்
வெய்துயிர்த்துக் கைபுடைத்து
வியர்த்து நோக்கி. 64

அனந்தவன்மன் கூற்று

376
வண்டினுக்குந் திசையானை
மதங்கொடுக்கு மலர்க்கவிகை யபயற்
கன்றித்
தண்டினுக்கு மெளியனோ

வெனவெகுண்டு தடம்புயங்கள்
குலுங்க நக்கே. 65

இகழ்ந்து பேசினான்

377
கானரணு மலையரணுங் கடலரணுஞ்
சூழ்கிடந்த கலிங்கர் பூமி
தானரண முடைத்தென்று கருதாது
வருவதுமத் தண்டு போலும். 66

எங்கராயன் அறிவுரை

378
என்று கூறலு மெங்க ராயனான்
ஒன்று கூறுவன் கேளென்
றுணர்த்துவான். 67

379
அரசர் சீறுவ ரேனு மடியவர்
உரைசெ யாதொழி யார்களு றுதியே.
68

380
ஏனை வேந்தை யெறியச் சயதரன்
தானை யல்லது தான்வர
வேண்டுமோ. 69

381
விட்ட தண்டினின் மீனவ ரைவருங்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை
போலுநீ. 70

382
போரின் மேற்றண் டெடுக்கப்

புறக்கிடுஞ்
சேரர் வார்த்தை செவிப்பட்ட
தில்லையோ. 71

383
வேலை கொண்டு விழிஞ
மழித்ததுஞ்
சாலை கொண்டதுந் தண்டுகொண்
டேயன்றோ. 72

384
மாறு பட்டெழு தண்டெழ வத்தவர்
ஏறு பட்டது மிம்முறை யேயன்றோ.
73

385
தளத்தொ டும்பொரு தண்டெழப்
பண்டொர்நாள்

அளத்தி பட்டத றிந்திலை யையநீ. 74

386
கண்ட நாயகர் காக்குந விலையிற்
கொண்ட தாயிரங் குஞ்சர மல்லவோ.
75

387
உழந்து தாமுடை மண்டலந்
தண்டினால்
இழந்த வேந்த ரெனையரென்
றெண்ணுகேன். 76

388
கண்டு காணுன் புயவலி நீயுமத்
தண்டு கொண்டவன் சக்கரம்
வந்ததே. 77

389
இன்று சீறினும் நாளையச்
சேனைமுன்
நின்ற போழ்தினி லென்னை
நினைத்தியால். 78

அனந்தவன்மனின் ஆத்திரப் பேச்சு
390
என்றிவையு ரைத்தலுமெ னக்கெதிரு
ரைக்கவிமை யோர்களுநடுங்கு
வர்புயக்
குன்றிவைசெ ருத்தொழில்பெ
றாதுநெடு
நாண்மெலிவு கொண்டபடி கண்டு
மிலையோ. 79

391
பிழைக்கவுரை செய்தனை

பிழைத்தனை
எனக்குறுதி பேசுவது வாசி கெடவோ
முழைக்கணிள வாளரி முகத்தெிள
தெனக்களிறு முட்டியெதிர் கிட்டி
வருமோ. 80

392
என்னுடைய தோள்வலியு
மென்னுடைய
வாள்வலியும் யாதுமறி யாது
பிறர்போல்
நின்னுடைய பேதைமையி
னாலுரைசெய்
தாயிதுநி னைப்பளவில் வெல்ல
வரிதோ. 81

கலிங்கர்கோன் கட்டளை

393
வேழமிர தம்புரவி வெம்படைஞர்
என்றினைய நம்படை விரைந்து
கடுகச்
சோழகுல துங்கன்விட வந்துவிடு
தண்டினெதிர் சென்றமர் தொடங்கு
கெனவே. 82

394
பண்ணுக வயக்களிறு பண்ணுக
வயப்புரவி பண்ணுக கணிப்பில்
பலதேர்
நண்ணுக படைச்செருநர் நண்ணுக
செருக்களம் நமக்கிகல் கிடைத்த
தெனவே. 83

கலிங்கர் படையொலி

395

கலிங்கமவை யேழினு
மெழுந்ததொரு
பேரொலி கறங்குகட லேழு முடனே
மலங்கியெழு பேரொலி யெனத்திசை
திகைப்புற வருந்தொனி யெழுந்த
பொழுதே. 84

கரி பரிப் படைகள்

396

தொளைமுக மதமலை யதிர்வன
தொடுகடல் பருகிய முகிலெனவே
வளைமுக நுரையுக வருபரி
கடலிடை மறிதிரை யெனவெழவே.
85

குடை சாமரை கொடி

397

இடையிடை யரசர்க ளிடுகுடை
கவரிக ளிவைகடல் நுரையெனவே
மிடைகொடி பிறழ்வன மறிகடல்
அடையவு மிளிர்வன கயலெனவே.
86

படையின் புறப்பாடு

398
அலகினொ டலகுகள் கலகல
வெனுமொலி யலைதிரை
யொலியெனவே
உலகுகள் பருகுவ தொருகடல்
இதுவென வுடலிய படையெழவே.
87

தேர்களும் வீரர்களும்

399
விசைபெற விடுபரி யிரதமு
மறிகடல் மிசைவிடு கலமெனவே
இசைபெற வுயிரையு மிகழ்தரும்
இளையவ ரெறிசுற வினமெனவே.
88

படை சென்றதன் விளைவு

400
விடவிகண் மொடுமொடு விசைபட
முறிபட வெறிபட நெறிபடவே
அடவிகள் பொடிபட அருவிகள்
அனல்பட அருவரை துகள்படவே.
89

சினத்தீயும் முரசொலியும்

401

அறைகழ லிளையவர் முறுகிய
சினவழ லதுவட வனலெனவே
முறைமுறை முரசுகள் மொகுமொகு
வதிர்வன முதிர்கட லதிர்வெனவே.
90

படைகளின் நெருக்கம்

402

ஒருவர்த முடலினி லொருவர்தம்
உடல்புக வுறுவதொர் படியுகவே
வெருவர மிடைபடை நடுவொரு
வெளியற விழியிட வரிதெனவே. 91

வீரர்கள் போருக்கெழுந்தனர்

403

வெளியரி தெனவெதிர் மிடைபடை
மனுபரன் விடுபடை யதனெதிரே
எளிதென விரைபெறு புலியென
வலியினொ டெடுமெடு
மெடுமெனவே. 92

---

## 12 . போர் பாடியது

போரின் பேரொலி

404
எடுமெடு மெடுமென வெடுத்ததோர்
இகலொலி கடலொலி யிகக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
விடும்விடு மெனுமொலி
மிகைக்கவே. 1

405

வெருவர வரிசிலை தெறித்தநாண்
விசைபடு திசைமுகம் வெடிக்கவே
செருவிடை யவரவர் தெழித்ததோர்
தெழியுல குகள்செவி டெடுக்கவே. 2

இருபடைகளும் குதிரைகளும்

406

எறிகட லொடுகடல் கிடைத்தபோல்
இருபடை களுமெதிர் கிடைக்கவே
மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
வருபரி யொடுபரி மலைக்கவே. 3

யானைப் படையும் குதிரைப்
படையும்

407

கனவரை யொடுவரை
முனைத்தபோற் கடகரி யொடுகரி
முனைக்கவே
இனமுகின் முகிலொடு
மெதிர்த்தபோல் இரதமொ டிரதமு
மெதிர்க்கவே. 4

வீரர்களும் அரசர்களும்

408
பொருபுலி புலியொடு சிலைத்தபோற்
பொருபட ரொடுபடர் சிலைக்கவே
அரியினொ டரியின மடர்ப்பபோல்
அரசரு மரசரு மடர்க்கவே. 5

விற்போர்
409
விளைகனல் விழிகளின்

முளைக்கவே மினலொளி கனலிடை
யெறிக்கவே
வளைசிலை யுருமென விடிக்கவே
வடிகணை நெடுமழை படைக்கவே.
6

குருதி ஆறு
410
குருதியின் நதிவெள பரக்கவே
குடையின நுரையென மிதக்கவே
கரிதுணி படுமுட லடுக்கியே
கரையென விருபுடை கிடக்கவே. 7

யானைப் போர்
411
மருப்பொடு மருப்பெதிர்
பொருப்பிவை எனப்பொரு மதக்கரி
மருப்பி னிடையே

நெருப்பொடு நெருப்பெதிர்
சுடர்ப்பொறி தெறித்தெழ நிழற்கொடி
தழற்க துவவே. 8

412
நிழற்கொடி தழற்கது வலிற்கடி
தொளித்தவை நினைப்பவர்
நினைப்ப தன்முனே
அழற்படு புகைக்கொடி யெடுத்தன
புதுக்கொடி யனைத்தினு நிரைத்த
தெனவே. 9

413
இடத்திடை வலத்திடை யிருத்திய
துணைக்கரம் நிகர்த்தன வடுத்த
கரியின்
கடத்தெழு மதத்திடை மடுத்தன
சிறப்பொடு கறுத்தன வவற்றி

னெயிறே. 10

414
எயிறுக ளுடையபொ ருப்பை
வலத்திடை எதிரெதி ரிருபணை
யிட்டுமு றுக்கிய
கயிறுக ளிவையென அக்கர டக்கரி
கரமொடு கரமெதிர் தெற்றிவ
லிக்கவே. 11

குதிரைகளின் தோற்றம்

415
முடுகிய பவனப தத்திலு கக்கடை
முடிவினி லுலகமு ணச்சுடர்
விட்டெழு
கடுகிய வடவன லத்தினை வைத்தது
களமுறு துரகக ணத்தின்மு கத்திலே.

12

வீரர்களின் பெருமிதம்

416
களமுறு துரகக ணத்தின்மு கத்தெதிர்
கறுவிலர் சிலர்கல வித்தலை நித்தில
இளமுலை யெதிர்பொரு மப்பொழு
திப்பொழு தெனவெதிர் கரியின்ம
ருப்பின்மு னிற்பரே. 13

வாள் வீரர்களின் சிறப்பு

417
எதிர்பொரு கரியின்ம ருப்பையு
ரத்தினில் இறவெறி படையினி
றுத்துமி றைத்தெழு
சதுரர்கண் மணியக லத்தும ருப்பவை

சயமகள் களபமு லைக்குறி
யொத்ததே. 14

குதிரை வீரர்களின் சிறப்பு

418
சயமகள் களபமு லைக்கணி யத்தகு
தனிவட மிவையென மத்தக
முத்தினை
அயமெதிர் கடவிம தக்கரி
வெட்டினர் அலைபடை நிரைகள்க
ளத்துநி ரைக்கவே. 15

வில் வீரரின் சிறப்பு

419
அலைபடை நிரைகள்நி றைத்தசெ
ருக்களம் அமர்புரி களமென

வொப்பில விற்படை
தலைபொர வெரியநெ ருப்பினின்
மற்றது தழல்படு கழைவன
மொக்கினு மொக்குமே. 16

420

தழல்படு கழைவன மெப்படி யப்படி
சடசட தமரமெ ழப்பக ழிப்படை
அழல்படு புகையொடி ழிச்சிய
கைச்சிலை அடுசிலை பகழிதொ
டுத்துவ லிப்பரே. 17

421

அடுசிலை பகழிதொ டுத்துவி
டப்புகும் அளவினி லயமெதிர்
விட்டவர் வெட்டின
உடல்சில இருதுணி பட்டன
பட்டபின் ஒருதுணி கருதுமி லக்கைய

ழிக்குமே. 18

422
ஒருதுணி கருதுமி லக்கைய ழித்தன
உருவிய பிறைமுக வப்பக ழித்தலை
அரிதரி திதுவுமெ னப்பரி யுய்ப்பவர்
அடியொடு முடிகள்து ணித்துவி
ழுத்துமே. 19

குதிரை வீரரின் சிறப்பு

423
அடியொடு முடிகள்து ணித்துவி
ழப்புகும் அளவரி தொடைசம
ரத்தொட ணைத்தனர்
நெடியன சிலசர மப்படிப் பெற்றவர்
நிறைசர நிமிரவி டத்துணி யுற்றவே.
20

424
நிறைசர நிமிரவி டத்துணி யுற்றவர்
நெறியினை யொடியெறி கிற்பவ
ரொத்தெதிர்
அறைகழல் விருதர்செ ருக்கற
வெட்டலின் அவருட லிருவகிர்
பட்டன முட்டவே. 21

கலிங்க வீரர் தடுத்தனர்

425
விடுத்த வீர ராயு தங்கள் மேல்வி
ழாம லேநிரைத்
தெடுத்த வேலி போற்க லிங்கர் வட்ட
ணங்க ளிட்டவே. 22

கேடகங்கள் துளைக்கப்பட்டன

426
இட்ட வட்ட ணங்கண் மேலெ றிந்த
வேல்தி றந்தவாய்
வட்ட மிட்ட நீண்ம திற்கு வைத்த
பூழை யொக்குமே. 23

வாளும் உலக்கையும்

427
கலக்க மற்ற வீரர் வாள்க லந்த சூரர்
கைத்தலத்
துலக்கை யுச்சி தைத்தபோ துழுங்க
லப்பை யொக்குமே. 24

துதிக்கையும் சக்கரமும்
428
மத்த யானை யின்க ரஞ்சு ருண்டு

வீழ வன்சரந்
தைத்த போழ்தி னக்க ரங்கள் சக்க
ரங்க ளொக்குமே. 25

வீழ்ந்த முத்துக்கள்
429
வெங்க ளிற்றின் மத்த கத்தின் வீழு
முத்து வீரமா
மங்கை யர்க்கு மங்க லப்பொ ரிசொ
ரிந்த தொக்குமே. 26

கேடகங்களுடன் வீரர்கள்

430
மறிந்த கேட கங்கி டப்ப மைந்தர்
துஞ்சி வைகுவோர்
பறிந்த தேரின் நேமி யோடு பார்கி
டப்ப தொக்குமே. 27

தண்டும் மழுவும்

431
களித்த வீரர் விட்ட நேமி கண்டு வீசு தண்டிடைக்
குளித்த போழ்து கைப்பி டித்த கூர்ம
ழுக்க ளொக்குமே. 28

குறையுடல்களும் பேய்களும்

432
கவந்த மாட முன்பு தங்க ளிப்பொ டாடு பேயினம்
நிவந்த வாட லாட்டு விக்கும் நித்த
கார ரொக்குமே. 29

ஒட்டகம் யானை குதிரை

433
ஒட்டகங்கள் யானை வாலு யர்த்தமா
வழிந்த போர்
விட்ட கன்று போகி லாது மீள்வ
போலு மீளுமே. 30

யானைகள் மேகங்களை ஒத்தன

434
பிறங்கு சோரி வாரி யிற்பி ளிற்றி
வீழ்க ளிற்றினங்
கறங்கு வேலை நீரு ணக் கவிழ்ந்த
மேக மொக்குமே. 31

வீரர் துருத்தியாளரை ஒத்தனர்

435

வாளில் வெட்டி வாரணக்கை தோளி
லிட்ட மைந்தர் தாம்
தோளி லிட்டு நீர்வி டுந் துருத்தி யாள
ரொப்பரே. 32

வில் வீரர் செயல்
436
நேர்முனையிற் றொடுத்த பகழிகள்
நேர்வளைவிற் சுழற்று மளவினின்
மார்பிடையிற் குளித்த பகழியை
வார்சிலையிற் றொடுத்து விடுவரே.
33

குதிரை வீரர் செயல்
437
அசையவுரத் தழுத்தி யிவுளியை
அடுசவளத் தெடுத்த பொழுதவை
விசையமகட் கெடுத்த கொடியென

விருதர்களத் தெடுத்து வருவரே. 34

தொடை அறுந்த வீரர் செயல்

438
இருதொடையற் றிருக்கு மறவர்கள்
எதிர்பொருகைக் களிற்றின் வலிகெட
ஒருதொடையைச் சுழற்றி
யெறிவர்கள் ஒருதொடையிட்
டுவைப்ப ரெறியவே. 35

வாள் வீரர் மடிந்தனர்

439
இருவருரத் தினுற்ற சுரிகையின்
எதிரெதிர்புக் கிழைக்கு மளவினில்
ஒருவரெனக் கிடைத்த பொழுதினில்
உபயபலத் தெடுத்த தரவமே. 36

யானை வீரரோடு பொருநர்

440
பொருநர்கள் சிலர்தமு ரத்தி
னிற்கவிழ் புகர்முக மிசையடி யிட்ட
திற்பகை
விருதரை யரிவர்சி ரத்தை யச்சிரம்
விழுபொழு தறையெனு மக்க
ளிற்றையே. 37

படைக்கருவி இல்லாதவர் செயல்

441
விடுபடை பெறுகிலர் மற்றி னிச்சிலர்
விரைபரி விழவெறி தற்கு முற்பட
அடுகரி நுதற்பட விட்ட கைப்படை
அதனையொர் நொடிவரை யிற்ப

றிப்பரே. 38

வீரர்கள் நாணினர்

442
அமர்புரி தமதக லத்தி டைக்கவிழ்
அடுகரி நுதலில டிப்ப ரிக்களி
றெமதென விருகண்வி ழிக்க
வுட்கினர் எனவிடு கிலர்படை ஞர்க்கு
வெட்கியே. 39

கருணாகரன் போரில் ஈடுபட்டான்

443
அலகில் செருமுதிர் பொழுது
வண்டையர் அரச னரசர்கள் நாதன்
மந்திரி
உலகு புகழ்கரு ணாக ரன்றன

தொருகை யிருபணை வேழ
முந்தவே. 40

இருபடைகளும் வெற்றிகாண
முற்படல்

444

உபய பலமும்வி டாது வெஞ்சமம்
உடலு பொழுதினில் வாகை
முன்கொள
அபயன் விடுபடை யேழ்க லிங்கமும்
அடைய வொருமுக மாகி முந்தவே.
41

இருபுறப் படைகளும் அழிந்தன

445

அணிக ளொருமுக மாக வுந்தின
அமர ரமரது காண முந்தினர்
துணிகள் படமத மாமு றிந்தன துரக

நிரையொடு தேர்மு றிந்தவே. 42

காலாட் படையின் அழிவு

446
விருத ரிருதுணி பார்நி றைந்தன
விடர்கள் தலைமலை யாய்நெ
ளிந்தன
குருதி குரைகடல் போற்ப ரந்தன
குடர்கள் குருதியின் மேன்மி
தந்தவே. 43

களத்தில் பேரொலி

447
கரிகள் கருவிக ளோடு சிந்தின கழுகு
நரியொடு காக முண்டன
திரைகள் திசைமலை யோட டர்ந்தன

திமில குமிலமெ லாம்வி ளைந்தவே.
44

அனந்தவன்மன் தோற்று ஓடினான்

448
புரசை மதமலை யாயி ரங்கொடு
பொருவ மெனவரு மேழ்க
லிங்கர்தம்
அரச னுரைசெய்த வாண்மை
யுங்கெட அமரி லெதிர்விழி யாதொ
துங்கியே. 45

449
அறியு முழைகளி லோப துங்கிய
தரிய பிலனிடை யோம றைந்தது
செறியு மடவியி லோக ரந்தது தெரிய
வரியதெ னாவ டங்கவே. 46

கலிங்கர் நடுங்கினர்

450
எதுகொ லிதுவிது மாயை
யொன்றுகொல் எரிகொன் மறலிகொ
லூழி யின்கடை
அதுகொ லெனவல றாவி ழுந்தனர்
அலதி குலதியொ டேழ்க லிங்கரே.
47

கலிங்கர் சிதைந்தோடினர்

451
வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவ ரொருவழி போக லின்றியே.

452
ஒருவ ரொருவரி னோட முந்தினர்
உடலி னிழலினை யோட வஞ்சினர்
அருவர் வருவரெ னாவி றைஞ்சினர்
அபய மபயமெ னாந டுங்கியே. 49

குகைகளில் நுழைந்தனர்

453
மழைக ளதிர்வன போலு டன்றன
வளவன் விடுபடை வேழ
மென்றிருள்
முழைகள் நுழைவர்கள் போரி
லின்றுநம் முதுகு செயுமுப கார
மென்பரே. 50

## கலிங்கம் இழந்த கலிங்கர்

454
ஒருக லிங்கமொ ருவன ழித்தநாள்
ஒருக லிங்கமொ ருவரு டுத்ததே. 51

## சோழர் யானை குதிரைகளைக் கைப்பற்றினர்

455
அப்படிக் கலிங்க ரோட அடர்த்தெறி
சேனை வீரர்
கைப்படு களிறும் மாவுங்
கணித்துரைப் பவர்கள் யாரே. 52

## களிறுகளின் தன்மை

456

புண்டரு குருதி பாயப் பொழிதரு
கடமும் பாய
வண்டொடும் பருந்தி னோடும்
வளைப்புண்ட களிற நேகம். 53

457
ஒட்டறப் பட்ட போரி லூர்பவர்
தம்மை வீசிக்
கட்டறுத் தவர்போல் நின்று கட்டுண்ட
களிற நேகம். 54

458
வரைசில புலிக ளோடு வந்துகட்
டுண்ட வேபோல்
அரைசருந் தாமுங் கட்டுண்
டகப்பட்ட களிற நேகம். 55

சோழ வீரர்கள் கைப்பற்றியவை

459
நடைவ யப்பரி யிரத மொட்டகம்
நவநி திக்குல மகளிரென்
றடைவ வப்பொழு தவர்கள்
கைக்கொளும் அவைக ணிப்பது
மருமையே. 56

கருணாகரன் கட்டளை இட்டான்

460
இவைக வர்ந்தபி னெழுக லிங்கர்தம்
இறையை யுங்கொடு பெயர்துமென்
றவனி ருந்துழி யறிக வென்றனன்
அபயன் மந்திரி முதல்வனே. 57

ஒற்றர்கள் தேடினர்
461

உரைகள் பிற்படு மளவி லொற்றர்கள்
ஒலிக டற்படை கடிதுபோய்
வரைக ளிற்புடை தடவி யப்படி
வனமி லைப்புரை தடவியே. 58

ஒற்றர்களின் பேச்சு

462

சுவடு பெற்றில மவனை மற்றொரு
சுவடு பெற்றன மொருமலைக்
குவடு பற்றிய தவன டற்படை அதுகு
ணிப்பரி தெனலுமே. 59

மலையை அடைந்தனர்

463

எக்குவடு மெக்கடலு மெந்தக் காடும்
இனிக்கலிங்கர்க் கரணாவ தின்றே
நாளும்

அக்குவடு மக்கடலும் வளைந்து
வெய்யோன் அத்தமனக்
குவடணையு மளவிற் சென்றே. 60

விடியளவும் வெற்பைக் காத்தனர்

464
தோலாத களிற்றபயன் வேட்டைப்
பன்றி தொழுவடைத்துத்
தொழுவதனைக் காப்பார்போல
வேலாலும் வில்லாலும் வேலி கோலி
வெற்பதனை விடியளவுங் காத்து
நின்றே. 61

மலை சிவந்தது

465
செம்மலையா யொளிபடைத்த

தியாதோ வென்றுஞ்
செங்கதிரோ னுதயஞ்செய் துதய
மென்னும்
அம்மலையோ விம்மலையு
மென்னத் தெவ்வர்
அழிகுருதி நதிபரக்க வறுக்கும்
போழ்தில். 62

சிலர் திகம்பரரானார்

466
வரைக்கலிங்கர் தமைச்சேர மாசை
யேற்றி
வன்றூறு பறித்தமயிர்க் குறையும்
வாங்கி
அரைக்கலிங்க முரிப்புண்ட கலிங்க
ரெல்லாம்
அமணரெனப் பிழைத்தாரு மநேக

ராங்கே. 63

சிலர் வேதியரானார்

467
வேடத்தாற் குறையாது முந்நூ லாக
வெஞ்சிலைநாண் மடித்திட்டு
விதியாற் கங்கை
ஆடப்போந் தகப்பட்டேங் கரந்தோ
மென்றே
அரிதனைவிட் டுயிர்பிழைத்தா ரநேக
ராங்கே. 64

சிலர் புத்தத் துறவியரானார்

468
குறியாகக் குருதிகொடி யாடை யாகக்
கொண்டுடுத்துப் போர்த்துத்தங்

குஞ்சி முண்டித்
தறியீரோ சாக்கியரை யுடைகண்
டாலென்
அப்புறமென் றியம்பிடுவ ரநேக
ராங்கே. 65

சிலர் பாணர் ஆனார்

469
சேனைமடி களங்கண்டேந் திகைத்து
நின்றேம்
தெலுங்கரே மென்றுசில கலிங்கர்
தங்கள்
ஆனைமணி யினைத்தாளம் பிடித்துக்
கும்பிட்
டடிப்பாண ரெனப்பிழைத்தா ரநேக
ராங்கே. 66

கலிங்க வீரர் முற்றும் அழிந்தனர்

470
இவர்கண்மே லினியொருவர்
பிழைத்தா ரில்லை
எழுகலிங்கத் தோவியர்க ளெழுதி
வைத்த
சுவர்கண்மே லுடலன்றி யுடல்க
ளெங்குந்
தொடர்ந்துபிடித் தறுத்தார்முன்
னடைய வாங்கே. 67

அடி சூடினான் தொண்டைமான்

471
கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப
நாட்டிக்
கடகரியுங் குவிதனமுங் கவர்ந்து

தெய்வச்
சுடர்ப்படைவா ளபயனடி யருளி
னோடுஞ்
சூடினான் வண்டையர்கோன்
தொண்டை மானே. 68

---

## 13. களம் பாடியது

களச் சிறப்பு

472
தேவாசுர ராமாயண மாபாரத
முளவென்
றோவாவுரை ஓயும்படி உளதப்
பொருகளமே. 1

பேய் வேண்டக் காளி அணுகல்

473
காலக்கள மதுகண்டரு ளிறைவீகடி
தெனவே
ஆலக்கள முடையான்மகி ழமுதக்கள
மணுகி. 2

காளி களங்கண்டு வியத்தல்
474
என்னேயொரு செருவெங்கள
மெனவேயதி சயமுற்
றந்நேரிழை யலகைக்கண
மவைகண்டிட மொழியும். 3

யானையும் கப்பலும்
475
உடலின்மேற் பலகாயஞ் சொரிந்து
பின்கால்

உடன்பதைப்ப வுதிரத்தே யொழுகும்
யானை
கடலின்மேற் கலந்தொடரப் பின்னே
செல்லுங்
கலம்போன்று தோன்றுவன
காண்மின் காண்மின். 4

குதிரையும் குதிரைத் தறியும்

476
நெடுங்குதிரை மிசைக்கலணை
சரியப் பாய்ந்து
நிணச்சேற்றிற் கால்குளிப்ப நிரையே
நின்று
படுங்குருதிக் கடும்புனலை
யடைக்கப் பாய்ந்த
பலகுதிரைத் தறிபோன்ற பரிசு
காண்மின். 5

வீரர் முகமலர்ந்து கிடந்தமை

477
விருந்தினரும் வறியவரு நெருங்கி யுண்ண
மேன்மேலு முகம்மலரு மேலோர் போலப்
பருந்தினமுங் கழுகினமுந் தாமே யுண்ணப்
பதுமமுக மலர்ந்தாரைப் பார்மின் பார்மின். 6

வீரர்களும் கருமிகளும்

478
சாமளவும் பிறர்க்குதவா தவரை நச்சிச்

சாருநர்போல் வீரருடல் தரிக்கு மாவி
போமளவு மவரருகே யிருந்து
விட்டுப்
போகாத நரிக்குலத்தின் புணர்ச்சி
காண்மின். 7

வண்டும் விலைமாதரும்
479
மாமழைபோற் பொழிகின்ற தான
வாரி
மறித்துவிழுங் கடகளிற்றை வெறுத்து
வானோர்
பூமழைமேற் பாய்ந்தெழுந்து நிரந்த
வண்டு
பொருட்பெண்டிர் போன்றமையுங்
காண்மின்காண்மின். 8

கொடியொடு கிடக்கும் யானைகள்

480
சாய்ந்துவிழுங் கடகளிற்றி னுடனே
சாய்ந்து
தடங்குருதி மிசைப்படியுங் கொடிகள்
தங்கள்
காந்தருடன் கனலமளி யதன்மேல்
வைகுங்
கற்புடைமா தரையொத்தல் காண்மின்
காண்மின். 9

கணவரைத் தேடும் மகளிர்
481
தங்கணவ ருடன்றாமும் போக
வென்றே
சாதகரைக் கேட்பாரே தடவிப்
பார்ப்பார்
எங்கணவர் கிடந்தவிட மெங்கே

யென்றென்
றிடாகினியைக் கேட்பாரைக்
காண்மின் காண்மின். 10

ஆவி சோரும் மனைவி

482
வாய்மடித்துக் கிடந்ததலை மகனை
நோக்கி
மணியதரத் தேதேனும் வடுவுண்
டாயோ
நீமடித்துக் கிடந்ததெனப் புலவி
கூர்ந்து
நின்றாவி சோர்வாளைக் காண்மின்
காண்மின். 11

கணவனைத் தழுவி உயிர்விடும்
பெண்

483
தரைமகள்தன் கொழுநன்ற னுடலந்
தன்னைத்
தாங்காமற் றன்னுடலாற் றாங்கி
விண்ணாட்
டரமகளி ரவ்வுயிரைப் புணரா
முன்னம்
ஆவியொக்க விடுவாளைக்
காண்மின் காண்மின். 12

தலை பெற்ற மனைவி செயல்

484
பொருதடக்கை வாளெங்கே
மணிமார் பெங்கே
போர்முகத்தி லெவர்வரினும்
புறங்கொ டாத

பருவயிரத் தோளெங்கே யெங்கே
யென்று
பயிரவியைக் கேட்பாளைக்
காண்மின் காண்மின். 13

கருமேகம் செம்மேகத்தை
ஒத்திருத்தல்

485
ஆடற்று ரங்கம்பி டித் தாளை
யாளோட
டித்துப்பு டைத்தவ்வி ரும்புண்ணினீர்
ஒடித்தெ றிக்கக் கருங்கொண்டல்
செங்கொண்டல்
ஒக்கின்ற விவ்வாறு காண்மின்களோ.
14

கருங்காகம் வெண்காகத்தை

ஒத்திருத்தல்
486
நெருங்காக வச்செங் களத்தே
தயங்கும் நிணப்போர்வை
மூடிக்கொளக்
கருங்காகம் வெண்காக மாய்நின்ற
வாமுன்பு காணாத காண்மின்களோ.
15

போர்க்களம் தாமரைக் குளத்தை
ஒத்திருத்தல்
487
மிடையுற்ற தேர்மொட்டு
மொட்டொக்க வெஞ்சோரி நீரொக்க
வீழ்தொங்கல்பா
சடையொக்க வடுசெங்க ளம்பங்க
யப்பொய்கை யாமாறு
காண்மின்களோ. 16

வீரர் மூங்கிலை ஒத்திருத்தல்

488
வெயிற்றாரை வேல்சூழ வுந்தைக்க
மண்மேல்வி ழாவீரர் வேழம்பர்தங்
கயிற்றாலி ழுப்புண்டு சாயாது
நிற்குங்க ழாயொத்தல்
காண்மின்களோ. 17

பருந்தும் கழுகும் துன்புறல்

489
இருப்புக்க வந்தத்தின் மீதேற
லுஞ்சூர ரெஃகம்பு தைக்கஇறகைப்
பரப்பிச்சு ழன்றிங்கொர் பாறாட
ஈதோர்ப ருந்தாடல் காண்மின்களோ.
18

படைத்தலைவர் கடனாற்றல்

490
வருஞ்சேனை தஞ்சேனை மேல்வந்து
றாமேவில் வாள்வீரர் வாணாளுகக்
கருஞ்சேவ கஞ்செய்து செஞ்சோற
றச்செய்த கைம்மாறு
காண்மின்களோ. 19

எழுந்தாடும் வீரர் தலை

491
யானைப்ப டைச்சூரர் நேரான
போழ்தற்றெ ழுந்தாடு கின்றார்தலை
மானச்ச யப்பாவை விட்டாடும்
அம்மானை வட்டொத்தல்
காண்மின்களோ. 20

வானில் கண்ட காட்சி

492
எதிர்கொளுஞ் சுரர்விமா னங்களிற் சுரர்களாய்
ஏறுமா னவர்கள்தா மெண்ணுதற் கருமையிற்
கதிர்விசும் பதனிலே யிதனிலும் பெரியதோர்
காளையம் விளையுமா காண்மினோ காண்மினோ. 21

குருதிக் கடல்

493
அவிரிபஞ் சொரிமதங் கழியெனப் புகமடுத்

தவர்பரித் திரையலைத் தமர்செய்கா
லிங்கர்தங்
கவரிவெண் ணுரைநிரைத் தவருடற்
குருதியிற்
கடல்பரந் தோடுமா காண்மினோ
காண்மினோ. 22

யானைகள் மலைகளை ஒத்தல்

494
புவிபுரந் தருள்செயுஞ் சயதர
னொருமுறைப்
புணரிமே லணைபடப்
பொருவில்விற் குனிதலிற்
கவிகுலங் கடலிடைச் சொரிபெருங்
கிரியெனக்
கரிகளின் பிணமிதிற் காண்மினோ
காண்மினோ. 23

வீரர் வியத்தல்

495
உற்றவா யம்புதம் பரிசையுங்
கருவியும்
உருவிமார் பகலமு முருவிவீழ்
செருநர்விற்
கற்றவா வொருவன்விற் கற்றவா
வென்றுதங்
கைம்மறித் தவரையுங் காண்மினோ
காண்மினோ. 24

வீரர்தம் உடலங்கள் தேவர்களை
ஒத்தல்

496
விண்ணின்மொய்த் தெழுவிமா

னங்களிற் சுரர்களாய்
மீதுபோ முயிர்களே யன்றியே
யின்றுதங்
கண்ணிமைப் பொழியவே முகமலர்ந்
துடல்களுங்
கடவுளோர் போலுமா காண்மினோ
காண்மினோ. 25

வெட்டுண்ட யானைத்தலைகள்
சம்மட்டியை ஒத்தல்

497
பிறைப்பெ ரும்பணை வேழ
முன்னொடு பின்று ணிந்துத
ரைப்படுங்
குறைத்த லைத்துணி கொல்ல
னெஃகெறி கூட மொத்தமை
காண்மினோ. 26

வேல் பறித்து சாயும் வீரர்

498
வாயி னிற்புகு வேல்கள் பற்றுவ
லக்கை யோடுநி லத்திடைச்
சாயு மற்றவர் காள மூதிகள் தம்மை
யொத்தமை காண்மினோ. 27

வீரர் படகோட்டிகளை ஒத்தல்

499
படவூன்று நெடுங்குந்த மார்பி னின்று
பறித்ததனை நிலத்தூன்றித் தேர்மே
னிற்பார்
படவூன்றி விடுந்தொழிலோ ரென்ன
முன்னம்
பசுங்குருதி தோன்றுமால் காண்மின்

காண்மின். 28

நிணமென அம்பு பற்றிய பருந்தின் நிலை

500
வாயகலம் பரத்தமொடு
நிணங்கொண் டோட
மற்றதனை வள்ளுகிரின் பருந்து
கோணல்
வாயகலம் பரத்தினிடைக் கௌவி
வல்வாய்
வகிர்ப்பட்டு நிலம்பட்ட வண்ணங்
காண்மின். 29

பிணந்தின்ற பூதம் வரும் தோற்றம்

501

சாதுரங்கத் தலைவனைப்போர்க்
களத்தில் வந்த
தழைவயிற்றுப் பூதந்தா னருந்தி மிக்க
சாதுரங்கந் தலைசுமந்து கமஞ்சூற்
கொண்டு
தனிப்படுங்கா ரெனவருமத் தன்மை
காண்மின். 30

விழுப்புண்பட்ட யானை வீரர்

502
முதுகுவடிப் படியிருக்கு மென்ன
நிற்கு
முனைக்களிற்றோர் செருக்களத்து
முந்து தங்கண்
முதுகுவடுப் படுமென்ற வடுவை
யஞ்சி
முன்னம்வடுப் பட்டாரை யின்னங்

காண்மின். 31

கூழ் அடுமாறு கூறல்

503
களமடையக் காட்டுதற்கு முடிவ
தன்று கவிழுமதக் கரிசொரியக் குமிழி
விட்டுக்
குளமடைபட் டதுபோலுங் குருதி
யாடிக் கூழடுமி னென்றருளக்
கும்பிட் டாங்கே. 32

பேய்கள் அழைத்தல்

504
குறுமோ டீநெடு நிணமா லாய்குடை
கலதீ கூரெயி றீநீலி
மறிமா டீகுதிர் வயிறீ கூழட வாரீர்

கூழட வாரீரே. 33

பல் விளக்கல்

505
பறிந்த மருப்பின் வெண்கோலாற்
பல்லை விளக்கிக் கொள்ளீரே
மறிந்த களிற்றின் பழுவெலும்பை
வாங்கி நாக்கை வழியீரே. 34

நகம் நீக்கலும் எண்ணெய்
தேய்த்தலும்

506
வாயம் புகளா முகிர்கொள்ளி வாங்கி
யுகிரை வாங்கீரே
பாயுங் களிற்றின் மதத்தயிலம் பாயப்
பாய வாரீரே. 35

இரத்தத்தில் குளித்தல்

507
எண்ணெய் போக வெண்மூளை
யென்னுங் களியான் மயிர் குழப்பிப்
பண்ணை யாகக் குருதிமடுப் பாய்ந்து
நீந்தி யாடிரே. 36

கரையிலிருந்தே குளிப்பீர்

508
குருதிக் குட்ட மித்தனையுங் கோலும்
வேலுங் குந்தமுமே
கருவிக் கட்டு மாட்டாதீர் கரைக்கே
யிருந்து குளியீரே. 37

ஆடை உடுத்தல்

509

ஆழ்ந்த குருதி மடுநீந்தி யங்கே
யினையா திங்கேறி
வீழ்ந்த கலிங்கர் நிணக்கலிங்கம்
விரித்து விரித்துப் புனையீரே. 38

கைவளையும் காலணியும்

510

மதங்கொள் கரியின் கோளகையை
மணிச்சூ டகமாச் செறியீரே
பதங்கொள் புரவிப் படிதரளப்
பொற்பா டகமாப் புனையீரே. 39

காதணி

511

ஈண்டுஞ் செருவிற் படுவீர ரெறியும்
பாரா வளையடுக்கி
வேண்டு மளவும் வாய்நெகிழ்த்து
விடுகம் பிகளாப் புனையீரே. 40

காப்பணியும் காதணியும்

512
பணைத்த பனைவெங் கரிக்கரத்தாற்
பரிய பருநாண் கட்டீரே
இணைத்த முரசம் வாள்கம்பிட்
டிரட்டை வாளி யேற்றீரே. 41

தோளணியும் முத்து மாலையும்

513
பட்ட புரவிக் கவிகுரத்தாற் பாகு
வலயஞ் சாத்தீரே

இட்ட சுரிசங் கெடுத்துக்கோத் தேகா
வலியுஞ் சாத்தீரே. 42

வன்னசரம் அணிதல்

514

பொருசின வீரர்தங் கண்மணியும்
போதக மத்தக முத்தும்வாங்கி
வரிசை யறிந்து நரம்பிற்கோத்து
வன்ன சரங்க ளணியீரே. 43

உணவின் பொருட்டு எழுக

515

கொள்ளு மெனைப்பல
கோலமென்மேற் கொண்டிட
வேளையு மீதூர
உள்ளும் புறம்பும் வெதும்புங்காண்
உண்பத னுக்கொருப் படுவீரே. 44

சமையலறை அமைத்தல்

516
மாகாய மதமலையின்
பிணமலைமேல் வன்கழுகின் சிறகாற்
செய்த
ஆகாய மேற்கட்டி யதன்கீழே
அடுக்களைகொண் டடுமி னம்மா. 45

மெழுகல் கோலமிடல்
அடுப்பமைத்தல்

517
பொழிமதத்தா னிலமெழுகிப்
பொடிந்துதிர்ந்த பொடித்தரளப்
பிண்டி தீட்டி
அழிமதத்த மத்தகத்தை யடுப்பாகக்
கடுப்பாக்கொண் டடுமி னம்மா. 46

பானையை அடுப்பில் ஏற்றல்

518
கொற்றவாண் மறவ ரோச்சக்
குடரொடு தலையுங் காலும்
அற்றுவீ ழானைப் பானை அடுப்பினி
லேற்று மம்மா. 47

உண்பொருள் கொணர்தல்

519
வெண்டயிருஞ் செந்தயிரும்
விராய்க்கிடந்த கிழான்போல வீரர்
மூளைத்
தண்டயிரு மிடைவித்த புளிதமுமாத்
தாழிதொறுந் தம்மி னம்மா. 48

உலைநீர் ஊற்றல்

520
கொலையினுட் படுகரிக் குழிசியுட் கூழினுக்
குலையெனக் குதிரையின் உதிரமே சொரிமினோ. 49

உப்பும் காயமும் இடல்

521
துள்ளிவெங் களனில்வீழ் துரகவெண் பல்லெனும்
உள்ளியுங் கிள்ளியிட் டுகிரினுப் பிடுமினோ. 50

தீ மூட்டல்
522

தனிவிசும் படையினும் படைஞர்கண்
டவிர்கிலா
முனிவெனுங் கனலைநீர் மூளவைத்
திடுமினோ. 51

விறகு கொண்டு எரித்தல்
523
குந்தமும் பகழியுங் கோல்களும்
வேலுமாம்
இந்தனம் பலவெடுத் திடைமடுத்
தெரிமினோ. 52

பல்லும் பழவரிசியும்

524
கல்லைக் கறித்துப் பல்முறிந்து
கவிழ்ந்து வீழ்ந்த கலிங்கர்தம்
பல்லைத் தகர்த்துப் பழவரிசி ஆகப்

பண்ணிக் கொள்ளீரே. 53

அரிசியும் குற்றும் உரலும்

525

சுவைக்கு முடிவிற் கூழினுக்குச்
சொரியு மரிசி வரியெயிறா
அவைக்கு முரல்க ளெனக்குரல்கள்
அவிந்த முரசங் கொள்ளீரே. 54

அரிசி குற்றல்

526

இந்த வுரற்க ணிவ்வரிசி எல்லாம்
பெய்து கொல்யானைத்
தந்த வுலக்கை தனையோச்சிச் சலுக்கு
முலுக்கெனக் குற்றீரே. 55

காளியைப் பாடி அரிசி குற்றல்

527
தணந்த மெலிவு தான்றீரத் தடித்த
வுடல்வெம் பசிதீரப்
பிணந்தரு நாச்சியைப் பாடீரே
பெருந்திரு வாட்டியைப் பாடீரே. 56

குலோத்துங்கனைப் பாடிக் குற்றல்

528
கவன நெடும்பரி வீரதரன் காவிரி
நாடுடை யானிருதோள்
அவனி சுமந்தமை பாடீரே அரவு
தவிர்ந்தமை பாடீரே. 57

சேர பாண்டியரை வென்றலை கூறிக்
குற்றல்

529
மன்னர் புரந்தரன் வாளபயன் வாரண
மிங்கு மதம்படவே
தென்ன ருடைந்தமை பாடீரே சேர
ருடைந்தமை பாடீரே. 58

சேர பாண்டியர் வணங்கியமை கூறிக்
குற்றல்

530
வணங்கிய சேரர் மணிமுடியும்
வழுதியர் தங்கண் மணிமுடியும்
பிணங்கிய சேவடி பாடீரே
பெருமான் திருவடி பாடீரே. 59

வடவேந்தரை வென்றமை கூறிக்
குற்றல்

531
ஒளிறு நெடும்படை வாளபயற் குத்தர
பூமிய ரிட்டதிறைக்
களிறு வரும்படி பாடீரே கடமத
நாறுவ பாடீரே. 60

பகைவர் பணிந்தமை கூறிக் குற்றல்

532
பௌவ மடங்க வளைந்தகுடைப்
பண்டித சோழன் மலர்க்கழலில்
தெவ்வர் பணிந்தமை பாடீரே
சிலையா டியவலி பாடீரே. 61

உலகம் இன்புற ஆண்டமை கூறிக்
குற்றல்

533
எற்றைப் பகலினும் வெள்ளணிநாள்
இருநிலப் பாவை நிழலுற்ற
கொற்றக் குடையினைப் பாடீரே
குலோத்துங்க சோழனைப் பாடீரே.
62

கருணாகரனைப் பாடிக் குற்றல்

534
வண்டை வளம்பதி பாடீரே
மல்லையுங் கச்சியும் பாடீரே
பண்டை மயிலையும் பாடீரே
பல்லவர் தோன்றலைப் பாடீரே. 63

தொண்டையர் வேந்தனைப் பாடிக்
குற்றல்

535
காட்டிய வேழ வணிவாரிக் கலிங்கப்
பரணிநங் காவலன்மேற்
சூட்டிய தோன்றலைப் பாடீரே
தொண்டையர் வேந்தனைப் பாடீரே.
64

குலோத்துங்கன் புகழ் பாடிக் குற்றல்

536
இடைபார்த்துத் திறைகாட்டி
இறைவிதிருப் புருவத்தின்
கடைபார்த்துத் தலைவணங்குங்
கதிர்முடி நூறாயிரமே. 65

பலவேந்தர் அடி வணங்கல் கூறி
குற்றல்

537
முடிசூடு முடியொன்றே முதலபய
னெங்கோமான்
அடிசூடு முடியெண்ணில் ஆயிரம்
நூறாயிரமே. 66

திறைதரா வேந்தர் அழிந்தமை கூறிக்
குற்றல்

538
முடியினால் வழிபட்டு
மொழிந்ததிறை யிடாவேந்தர்
அடியினால் மிதிபட்ட அருவரைநூ
றாயிரமே. 67

பார்வேந்தர் படும் சிறுமை கூறிக்
குற்றல்

539
தார்வேய்ந்த புயத்தபயன்
தன்னமைச்சர் கடைத்தலையிற்
பார்வேந்தர் படுகின்ற பரிபவம்நூ
றாயிரமே. 68

மறை ஓம்பியமை கூறிக் குற்றல்

540
தாங்காரப் புயத்தபயன்
தண்ணளியாற் புயல்வளர்க்கும்
ஓங்கார மந்திரமும் ஒப்பிலநூ
றாயிரமே. 69

பாராண்ட புகழ்பாடிக் குற்றல்

541
போர்தாங்குங் களிற்றபயன்

புயமிரண்டு மெந்நாளும்
பார்தாங்கப் பரந்தீர்ந்த பணிப்பணநூ
றாயிரமே. 70

திருமால் எனப் பாடிக் குற்றல்

542
நாற்கடலைக் கவித்தகுடை நரதுங்க
னமுதமெழப்
பாற்கடலைக் கடைந்தருளும்
பணைப்புயநூ றாயிரமே. 71

தோள் இரண்டால் துணித்தமை

543
தாளிரண்டா னிலவேந்தர்
தலைதாங்குஞ் சயதுங்கன்
தோளிரண்டால் வாணனைமுன்

துணித்ததோ ளாயிரமே. 72

தூது நடந்தான்

544
சூழிமுகக் களிற்றபயன் தூதுநடந்
தருளியநாள்
ஆழிமுதற் படையெடுத்த
அணிநெடுந்தோ ளாயிரமே. 73

அரிசி புடைத்தல்

545
பல்லரிசி யாவுமிகப் பழவரிசி
தாமாகச்
சல்லவட்ட மெனுஞ்சுளகால்
தவிடுபடப் புடையீரே. 74

அரிசியை அளத்தல்

546
பாணிகளா னிலந்திருத்திப்
படைக்கலிங்க ரணிபகழித்
தூணிகளே நாழிகளாத் தூணிமா
வளவீரே. 75

உலையில் இடல்

547
விறற்புட்டி லவைசிறிய விற்கூடை
பெரியனகொண்
டுறற்பட்ட வரிசிமுகந்
துலைகடொறுஞ் சொரியீரே. 76

துடுப்பும் அகப்பையும்

548

களப்பரணிக் கூழ்பொங்கி வழியாமற்
கைதுடுப்பா
அளப்பரிய குளப்புக்கால்
அகப்பைகளாகக் கொள்ளீரே. 77

கூழைச் சுவை பார்த்தல்

549

வைப்புக் காணு நமக்கின்று வாரீர்
கூழை யெல்லீரும்
உப்புப் பார்க்க வொருதுள்ளி
உள்ளங் கையிற் கொள்ளீரே. 78

கூழை நன்கு கிண்டுதல்

550

அழலைக் கையிற் கொள்ளாமே

அடுப்பை யவித்துக் கைத்துடுப்பாற்
சுழலச் சுழலப் புடையெங்குந்
துழாவித் துழாவிக் கொள்ளீரே. 79

பதம் பார்த்துக் கூழ் இறக்கல்

551
பற்றிப் பாரீ ரினிக்கூழின் பதமுஞ்
சுவையும் பண்டுண்ட
மற்றைக் கூழின் மிகநன்று வாரீ
ரிழிச்ச வாரீரே. 80

பானைப் பிடித்து இறக்கல்

552
எடுத்துக் கைகள் வேகாமே இவுளித்
துணியிட் டிருமருங்கும்
அடுத்துப் பிடித்து மெத்தெனவே

அடுப்பி னின்று மிழிச்சீரே. 81

கூழின் மிகுதி

553
ஒருவாய் கொண்டே யிதுதொலைய
உண்ண வொண்ணா தென்றென்று
வெருவா நின்றீ ராயிரம்வாய்
வேண்டு மோவிக் கூழுணவே. 82

நாத் தோய்க்கின் கூழ் சுவறும்

554
வெந்த இரும்பிற் புகும்புனல்போல்
வெந்தீப் பசியால் வெந்தெரியும்
இந்த விடம்பை நாத்தோய்க்கில்
இக்கூ ழெல்லாஞ் சுவறாதோ. 83

உண்டு மிகுமோ

555

பண்டு மிகுமோ பரணிக்கூழ் பார
கத்தி லறியேமோ
உண்டு மிகுமோ நீர்சொன்ன உபாய
மிதுவுஞ் செய்குவமே. 84

உணவுக்குமுன் நீர் வைத்துக்
கொள்ளல்

556

வெம்புங் குருதிப் பேராற்றில்
வேண்டுந் தண்ணீர் வேழத்தின்
கும்பங் களிலே முகந்தெடுத்துக்
குளிர வைத்துக் கொள்ளீரே. 85

நிலத்தைத் தூய்மை செய்தல்

557
சோருங் களிற்றின் வாலதியாற் சுழல
வலகிட் டலைகுருதி
நீருந் தெளித்துக் கலம்வைக்க நிலமே
சமைத்துக் கொள்ளீரே. 86

உண்கலம் அமைத்தல்

558
போர்மண் டலிகர் கேடகத்தின் புளகச்
சின்னம் பரப்பீரே
பார்மண் டலிகர் தலைமண்டை
பலமண் டைகளாக் கொள்ளீரே. 87

பொன் வெள்ளிக் கலங்கள்
559
அழிந்த கலிங்கர் பொற்பரிசை

அவைபொற் கலமாக் கொள்ளீரே
விழுந்த தவளக் குடைமின்னும்
வெள்ளிக் கலமாக் கொள்ளீரே. 88

கூழ் பங்கிடக் கருவி கொள்ளல்
560
நிலத்தைச் சமைத்துக் கொள்ளீரே
நெடுங்கைக் களிற்றி னிருசெவியாங்
கலத்திற் கொள்ளக் குறையாத
கலங்கள் பெருக்கிக் கொள்ளீரே. 89

பகல் விளக்கும் பா ஆடையும்
561
கதம்பெற் றார்க்குஞ் செறுநர்விழிக்
கனலு நிணமு மணங்கின்பாற்
பதம்பெற் றார்க்குப் பகல்விளக்கும்
பாவா டையுமாக் கொள்ளீரே. 90

உணவுண்ண அழைத்தல்

562

பரிசு படவே கலம்பரப்பிப் பந்தி
பந்தி படவுங்கள்
வரிசை யுடனே யிருந்துண்ண வாரீர்
கூழை வாரீரே. 91

தலைகளை அகப்பைகளாகக்
கொள்ளல்

563

கங்கா புரியின் மதிற்புறத்துக் கருதார்
சிரம்போய் மிகவீழ
இங்கே தலையின் வேல்பாய்ந்த
இவைமூ ழைகளாக் கொள்ளீரே. 92

மடைப்பேய்களுக்கு ஆணை

564
கிடைக்கப் பொருது மணலூரிற் கீழ்நா
ளட்ட பரணிக்கூழ்
படைத்துப் பயின்ற மடைப்பேய்கள்
பந்தி தோறும் வாரீரே. 93

பார்ப்பனப் பேய்க்குக் கூழ் வார்த்தல்

565
அவதி யில்லாச் சுவைக்கூழ்கண்
டங்காந் தங்காந் தடிக்கடியும்
பவதி பிட்சாந் தேகியெனும் பனவப்
பேய்க்கு வாரீரே. 94

சமணப் பேய்களுக்குக் கூழ் வார்த்தல்

566
உயிரைக் கொல்லாச் சமண்பேய்கள்

ஒருபோழ் துண்ணு மவையுண்ண
மயிரைப் பார்த்து நிணத்துகிலால்
வடித்துக் கூழை வாரீரே. 95

புத்தப் பேய்க்குக் கூழ் வார்த்தல்

567
முழுத்தோல் போர்க்கும் புத்தப்பேய்
மூளைக் கூழை நாக்குழறக்
கழுத்தே கிட்ட மணந்திரியாக் கஞ்சி
யாக வாரீரே. 96

பார்வைப் பேய்க்குக் கூழை
வார்த்தல்

568
கொய்த விறைச்சி யுறுப்பனைத்துங்
கொள்ளுநங் கூழை வெள்ளாட்டின்

பைத லிறைச்சி தின்றுலர்ந்த
பார்வைப் பேய்க்கு வாரீரே. 97

குருட்டுப் பேய்க்குக் கூழை வார்த்தல்

569
ஊணா தரிக்குங் கள்ளப்பேய்
ஒளித்துக் கொண்ட கலந்தடவிக்
காணா தரற்றுங் குருட்டுப்பேய்
கைக்கே கூழை வாரீரே. 98

ஊமைப் பேய்க்குக் கூழ் வார்த்தல்

570
பையாப் போடு பசிகாட்டிப் பதலை
நிறைந்த கூழ்காட்டிக்
கையா லுரைக்கு மூமைப்பேய்
கைக்கே கூழை வாரீரே. 99

கருவுற்ற பேய்க்குக் கூழ் வார்த்தல்

571
அடைத்த செவிகள் திறந்தனவால்
அடியேற் கென்று கடைவாயைத்
துடைத்து நக்கிச் சுவைகாணுஞ்
சூற்பேய்க் கின்னுஞ் சொரியீரே. 100

மூடப்பேய்க்குக் கூழ் வார்த்தல்

572
பொல்லா வோட்டைக் கலத்துக்கூழ்
புறத்தே யொழுக மறித்துப்பார்த்
தெல்லாங் கவிழ்த்துத்
திகைத்திருக்கும் இழுதைப் பேய்க்கு
வாரீரே. 101

நோக்கப் பேய்க்குக் கூழ் வார்த்தல்

573

துதிக்கைத் துணியைப் பல்லின்மேற்
செவ்வே நிறுத்தித் துதிக்கையின்
நுதிக்கே கூழை வாரென்னும்
நோக்கப் பேய்க்கு வாரீரே. 102

கூத்திப் பேய்க்குக் கூழ் வார்த்தல்

574

தடியான் மடுத்துக் கூழெல்லாந்
தானே பருகித் தன்கணவன்
குடியா னென்று தான்குடிக்குங்
கூத்திப் பேய்க்கு வாரீரே. 103

விருந்துப் பேய்க்கும்
ஊர்ப்பேய்க்கும் கூழ் வார்த்தல்

575
வருகூழ்ப் பரணிக் களங்கண்டு வந்த
பேயை முன்னூட்டி
ஒருகூழ்ப் பரணி நாமிருக்கும்
ஊர்க்கட் பேய்க்கு வாரீரே. 104

கனாக்கண்டு உரைத்த பேய்க்குக் கூழ்
வார்த்தல்

576
இரவு கனவு கண்டபேய்க் கிற்றைக்
கன்றி நாளைக்கும்
புரவி யுரித்தோற் பட்டைக்கே
கூழைப் பொதிந்து வையீரே. 105

கணக்கப் பேய்க்குக் கூழ் வார்த்தல்

577
இணக்க மில்லா நமையெல்லாம்
எண்ணிக் கண்டே மென்றுரைக்குங்
கணக்கப் பேய்க்கு மகங்களிக்கக்
கையா லெடுத்து வாரீரே. 106

பேய்கள் உண்ணல்

578
மென்குடர் வெள்ளை குதட்டிரே
மெல்விர லிஞ்சி யதுக்கீரே
முன்கை யெலும்பினை மெல்லீரே
மூளையை வாரி விழுங்கீரே. 107

579
அள்ளி யருகிருந் துண்ணீரே
அரிந்திடு தாமரை மொட்டென்னும்
உள்ளி கறித்துக்கொண் டுண்ணீரே

ஊதி வரன்றிக்கொண் டுண்ணீரே.
108

580
தமக்கொரு வாயொடு வாய்மூன்றுந்
தாமினி தாப்படைத் துக்கொண்டு
நமக்கொரு வாய்தந்த நான்முகனார்
நாணும் படிகளித் துண்ணீரே. 109

581
ஓடி யுடல்வியர்த் துண்ணீரே உந்தி
பறந்திளைத் துண்ணீரே
ஆடி யசைந்தசைந் துண்ணீரே அற்ற
தறவறிந் துண்ணீரே. 110

வாய் கழுவல்

582

கொதித்த கரியின் கும்பத்துக்
குளிர்ந்த தண்ணீர் தனைமொண்டு
பொதுத்த தொளையாற் புகமடுத்துப்
புசித்த வாயைப் பூசீரே. 111

வெற்றிலை போடுதல்

583
பண்ணு மிவுளிச் செவிச்சுருளும்
பரட்டிற் பிளவும் படுகலிங்கர்
கண்ணின் மணியிற் சுண்ணாம்புங்
கலந்து மடித்துத் தின்னீரே. 112

புரையேற்றம் நீங்குவதற்கு மருந்து

584
பெருக்கத் தின்றீர் தாம்பூலம்
பிழைக்கச் செய்தீர் பிழைப்பீரே

செருக்கும் பேய்காள் பூதத்தின்
சிரத்தின் மயிரை மோவீரே. 113

பேய்கள் களிப்பு மிகுதியால்
கூத்தாடல்

585
என்று களித்துக் குமண்டையிட்டே
ஏப்ப மிட்டுப் பருத்துநின்ற
குன்று குனிப்பன போற்களத்துக்
கும்பிட் டேநட மிட்டனவே. 114

பாடி நின்று ஆடின
586
வாசி கிடக்கக் கலிங்கரோட மானத
னேவிய சேனைவீரர்
தூசி யெழுந்தமை பாடிநின்று தூசியு
மிட்டுநின் றாடினவே. 115

வென்றி பாடி ஆடின

587
பொருகை தவிர்ந்து கலிங்கரோடப்
போக புரந்தரன் விட்டதண்டின்
இருகையும் வென்றதொர்
வென்றிபாடி இருகையும் வீசிநின்
றாடினவே. 116

பேய்கள் களிப்பு மிகுதியால்
விளையாடல்

588
வழுதியர் வரைமுழை நுழைவடி
விதுவென மதகரி வயிறுகள்
புகநுழை வனசில
எழுதிய சிலையவர் செறிகடல்

விழுமவை இதுவென வழிகுரு
தியின்விழு வனசில. 117

உருள்வன சில மறிவன சில

589
உருவிய சுரிகையொ டுயர்கணை
விடுபடை உருள்வடி விதுவென
உருள்வன சிலசில
வெருவிய வடுநர்த முடைவடி
விதுவென விரிதலை யதனொடு
மறிவன சிலசில. 118

பேய்கள் குலோத்துங்கனை
வாழ்த்துதல்

590
உபய மெனும்பிறப் பாளரேத்த

உரைத்த கலிங்கர் தமைவென்ற
அபய னருளினைப் பாடினவே
அணிசெறி தோளினை
வாழ்த்தினவே. 119

வயப் புகழ் வாழ்த்தின

591
திசையிற் பலநர பாலர்முன்னே
தெரிந்துரைக் குஞ்சிசு பாலன்வைத
வசையில் வயப்புழ் வாழ்த்தினவே
மனுகுல தீபனை வாழ்த்தினவே. 120

பொன்னித் துறைவனை வாழ்த்தின

592
பொன்னித் துறைவனை
வாழ்த்தினவே பொருநைக்

கரையனை வாழ்த்தினவே
கன்னிக் கொழுநனை வாழ்த்தினவே
கங்கை மணாளனை வாழ்த்தினவே.
121

உலகுய்ய வந்தானை வாழ்த்தின
593
ஆழிக ளேழுமொ ராழியின்கீழ்
அடிப்பட வந்த வகலிடத்தை
ஊழிதொ றூழியுங் காத்தளிக்கும்
உலகுய்ய வந்தானை வாழ்த்தினவே.
122

கரிகாலனோடு ஒப்பிட்டு வாழ்த்தின
594
பூப்பது மத்தன் படைத்தமைத்த
புவியை யிரண்டா வதும்படைத்துக்
காப்பது மென்கட னென்றுகாத்த

கரிகாலச் சோழனை வாழ்த்தினவே.
123

வாழ்த்து

595
யாவ ருங்களிசி றக்க வேதருமம்
எங்கு மென்றுமுள தாகவே
தேவ ரின்னருள் தழைக்க
வேமுனிவர் செய்த வப்பயன்வி
ளைக்கவே. 124

596
வேத நன்னெறி பரக்க வேஅ பயன்
வென்ற வெங்கலிக ரக்கவே
பூத லம்புகழ்ப ரக்க வேபுவி நிலைக்க
வேபுயல்சு ரக்கவே. 125

# கலிங்கத்துப் பரணி முற்றிற்று

---

This page was first put up on November 28, 2001 and last revised to TSCII 1.7 version on 14 March 2002
Please send your comments and corrections to the Webmaster(s) of this site